# அறநெறி விளக்கம்

## கதிர் — உ

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்

எழுதியது

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

---

பதிப்புரிமை [அணா

**Approved by the Text-Book Committee.**

*Vide Fort St. George Gazette Page 517.*

*Dated 16th November 1926.*

# புறவுரை

—

இந்து சமயத்துக்கு இன்றியமையாத பொது ஒழுக்கங்களையும், அச்சமய சாத்திரப் பருப்பொருட்களையும், அதன் பத்ததிகளையும், அதன் பரிமளம் வீசும் அறம் பொருள் இன்பக் கூறுபாடுகளையும் ஒருமுறைப்படுத்தி, இளைஞருக்குச் சமயசாத்திர உணர்ச்சியைச் சிறிது சிறிதாகத் தோற்றுவிக்கும் பொருட்டு, 'அறநெறி விளக்கம்,' எனப் பெயர் வாய்ந்த இந்நூல்வரிசை வெளிவருத லாயிற்று. இது வைதிக தருமம், ஸ்மிருதி, ஆசாரம், புராணகதை, ஆகம பத்ததி, இதிகாச சரித்திரம் முதலான பலவற்றையும் உட்கொண்டு திகழ்வதாகலின் இவையெல்லாம் ஒருங்கே தழுவுவதற்கு இப்பெயர் இதற்குப் புனையப்பட்டது. சாத்திரம், தோத்திரம் என இருபாற்பட்ட திருப்பாடல்களும் இதன்கண் வேண்டிய அளவிற்குத் தரப்பட்டுள்ளன. அவை, மாணவருக்குத் தமிழ்ச் சுவையையும், ஆர்வப் பெருக்கையும் அளிக்கும் என்பது திண்ணம். இந்நூல்கள் பள்ளிக் கழகங்களிலே அன்றிப் பொதுவாகவும் இருபாலாரானும் முறையே கற்றுத் தேறுதற்கு ஏற்றவையாகும். 'பழையன கழிதல் புதுவன புதுதல்' என்னும் முறை ஓர்ப்புடன் ஆளப்பட்டுள்ளது. இவற்றை உலகம் ஏற்றுத் தமிழ்த் தொண்டு புரியும் என்னை ஊக்குவதாக அவன் அழகிய அருளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

மணி. திருநாவுக்கரசன்.

# உள்ளுறை

---


| உரை | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கடவுள் | ... | 1 |
| 2. | அழுத பிள்ளை பால் குடிக்கும் | ... | 8 |
| 3. | வேதம் | ... | 13 |
| 4. | திரிமூர்த்திகள் | ... | 17 |
| 5. | யானை கண்ட குருடர் கதை | ... | 20 |
| 6. | பிள்ளையார் குட்டு | ... | 24 |
| 7. | சரவணபவன் | ... | 29 |
| 8. | திக்குப் பாலகர் | ... | 37 |
| 9. | வாமனர் | ... | 41 |
| 10. | துருவன் | ... | 45 |
| 11. | விளையாட்டு வினையானது | ... | 52 |
| 12. | ஒழுக்கம் | ... | 55 |
| 13. | நீலகண்டன் | ... | 62 |
| 14. | முக்கண்ணன் | ... | 66 |
| 15. | எல்லாம் இறைவன் செயல் | ... | 68 |
| 16. | ஓர் உயிரையும் வருத்தாதே | ... | 70 |
| 17. | விரதம் | ... | 73 |

| பாட்டு | | | |
|---|---|---|---|
| 1. | சிவபெருமான்—திருவாசகம், திருமந்திரம் | ... | 7, 61 |
| 2. | சிவபெருமான்—தேவாரம் | ... | 13, 79 |
| 3. | கலைமகள் | ... | 19 |
| 4. | சிவபெருமான்—திருவருட்பா | ... | 19, 23 |
| 5. | பிள்ளையார் | ... | 28 |
| 6. | முருகன் | ... | 35 |
| 7. | திருமகள் | ... | 51 |
| 8. | கண்ணபிரான்—நாலாயிரப் பிரபந்தம் | ... | 65 |
| 9. | உமாதேவியார் | ... | 79 |
| 10. | முருகன்—திருப்புகழ் | ... | 80 |



திருமகள்

# அறநெறி விளக்கம்

கதிர்—உ

## 1. கடவுள்

(தாய்க்கும் சேய்க்கும் வினாவிடை)

வேதவல்லி—கடவுள் ஒருவர் உண்டு என்று நான் சொல்லியது ஞாபகம் இருக்கிறதா?

மணி—இருக்கிறது; ஆனால், கடவுள் ஒருவர் உண்டென்று நாம் எப்படி நம்பலாம்?

வேதவல்லி—இந்த உலகத்தைப் பார்த்தால் நாம் கடவுள் ஒருவர் உண்டென்று தெரிந்து கொள்ளலாம்.

மணி—அஃதெப்படி? எனக்கு நன்றாக விளங்கும்படி சொல்ல வேண்டும்.

வேதவல்லி—மணி, நாம் இப்பொழுது இருக்கும் இந்த வீட்டைப் பார். இந்த வீடு ஒருவரால் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பது நன்றாகத் தெரிகிறதல்லவா? இந்த வீட்டைப் பிரித்தால் சுவர், தூண், சட்டம், கல், மண் முதலியனதாமே கிடைக்கும்?

இவைகளை எல்லாம் ஒன்ருகச் சேர்ப்பதற்கு ஒருவர் வேண்டும் அல்லவா? கல்லுக்கும், மண்ணுக்கும், தூணுக்கும் அறிவு இல்லையே! கல்லும் மண்ணும் தாமே சேர்ந்து விடுமா? தூண் தானே நின்றுவிடுமா? இவைகளை எல்லாம் அறிவுடைய ஒருவன் எப்படி ஒன்ருகச் சேர்த்து வீட்டைக் கட்டுவாஞே அப்படியே இவ்வுலகத்தைப் படைத்த அறிவுடைய கடவுள் ஒருவர் இருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்.

மணி—வீட்டைப் பார்த்தால் அப்படித் தெரிகிறது. ஆனல் உலகத்தைப் பார்த்தால் அப்படி ஒன்றும் தெரிய வில்லையே!

வேதவல்லி—உலகம் என்பது என்ன? நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், வெளியும், உயிர்களும் சேர்ந்ததுதான் உலகம். நிலம் அறிவுடையதன்று. அப்படியே நீர், நெருப்பு முதலிய எல்லாப் பொருள்களுக்கும் அறிவு இல்லை. அதனல் இவைகளை யெல்லாம் ஒன்ருகச் சேர்த்தவர் கடவுள். சூரியனுக்கும் அறிவு இல்லை. அது எப்படிக் காலந்தவருமல் தன்னுடைய வேலையைச் செய்யும்? சந்திரன், நக்ஷத்திரங்கள், கோள்கள் எல்லாவற்றையும் இயக்கிக்கொண்டு தொழில் செய்து வருபவர் கடவுளே ஆவர்.

மணி—அம்மா, நிலம் நீர் முதலியவைகளுக்கு அறிவு இல்லை. ஆனால் உயிர்களுக்கெல்லாம் அறிவு இருக்கிறதே! அவைகள் ஏன் தாங்களே உண்டாகக் கூடாது?

வேதவல்லி—தம்பி, நீ நல்ல அறிவுடையவன்; நான் சொல்வதை நன்றாகக் கேள்: உலகத்திலே உள்ள உயிரில்லாத பொருள்கள் எல்லாம் அறிவில்லாத பொருள்கள். உயிருடைய பொருள்களுக்கு எல்லாம் அறிவு உண்டு. ஆனால், அவ்வுயிர்களுடைய அறிவோ மிகவும் சிறியது; அந்தச் சிற்றறிவைக்கொண்டு உயிர்கள் தாமே ஒரு தொழிலைச் செய்ய முடியாது. இப்பொழுது பார்! நமக்கு உடம்பு இருக்கிறது. இந்த உடம்பிலே கண், மூக்கு, காது, நாக்கு, கை, கால் முதலிய உறுப்புக்கள் எல்லாம் இருக்கின்றன. இவைகளின் உதவியைக் கொண்டு நாம் வாழ்கிறோம். இவைகளை யார் உண்டாக்கியது? நாம் இவைகளைப் படைத்துக் கொள்ள முடியுமா? ஓர் உயிரை நாம் உண்டாக்க முடியுமா? இன்னும் பார்! குருடன் ஒருவன் இருக்கிறான்; அவன் தானே தனக்கு வேண்டிய உறுப்புக்களைப் படைத்துக் கொள்வதானால் தன் கண்களைக் குருடாகப் படைத்துக் கொள்ளுவானா? இவ்

வளவு அழகான நமது உடம்பையும் மற்றப் பொருள்களையும், சூரியனையும் சந்திரனையும், விண்மீன்களையும் கடவுளே படைத்தார் என்று நீ அறிவாயாக.

மணி—கடவுள் இன்னும் நமக்கு என்ன செய்திருக்கிருர் ?

வேதவல்லி—அவர் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளுக்கு அளவே யில்லை. நாம் இந்த உலகத்திலே வாழ்வதற்கு என்னஎன்ன வேண்டுமோ அவைகளை யெல்லாம் படைத்துக் கொடுத்திருக்கிருர். ஒரு தாய், பெற்ற குழந்தையின் இடத்தில் எவ்வளவு அன்பு பாராட்டிக் காப்பாற்றுகிருளோ அவ்வளவு அன்பாக நம்மைக் கடவுள் காப்பாற்றுகிருர்.

மணி—கடவுள் எப்படிப்பட்டவர் ?

வேதவல்லி—இந்தப் பெரிய உலகத்தைப் பார் ! எவ்வளவு பேரழகாக விளங்குகிறது ! நாம் வானத்தை அண்ணாந்து பார்த்தால் அளவில்லாத மீன்கள் மின்னுகின்றன. நம்மைச் சுற்றி எங்குப் பார்த்தாலும் உயிர்கள் காணப்படுகின்றன. எறும்பு முதல் யானை முடிவாக எத்தனையோ உயிர்ப்பொருள்கள் வாழ்கின்றன. அவைகளுடைய தொழில்களும், அறிவுகளும் எத்தனையோ வகையாக இருக்கின்

றன. இவைகளால் கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதும், எல்லாவற்றையும் முழுதும் அறிபவர் என்பதும், எல்லாவற்றுக்கும் ஆதாரம் ஆனவர் என்பதும், எல்லா ஆற்றலும் உடையவர் என்பதும் தோன்ற வில்லையா ?

மணி—அப்படியா ! நான் அறிந்தேன். அம்மா, கடவுள் ஒருவரா ? பலரா ?

வேதவல்லி—முதற் கடவுள் ஒருவரே ; பலர் கடவுளாராக இருக்க முடியாது. பலர் இருந்தால் அவர்கள் எல்லாரும் முதற் கடவுள் ஆகமாட்டார்கள். அவர்கள் எல்லாரும் ஒரே முதற் கடவுளுடைய கட்டளையின்படி அவருடைய அதிகாரத்தைப் பெற்று நடக்கின்ற தேவர்கள்.

மணி—அஃதெப்படி அம்மா ?

வேதவல்லி—இப்பொழுது நமது சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் என்பவர் இருக்கிறார். அவர் ஒருவரே நமக்கு அரசர். ஆனால், அவருக்குக் கீழ் அவருடைய பிரதிநிதியாக எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் அரசர் அதிகாரம் கொடுத்திருக்கிறார். அரசருடைய அதிகாரத்தை அவர்கள் செலுத்தி வருகிறார்கள்.

ஆனால், அவர்கள் எல்லாரும் அரசர் ஆய் விடுவார்களா? அதனால், நாம் அரசர் பலர் என்று சொல்லலாமா? சொல்லக் கூடாதே. அதுபோலவே நமக்கு எல்லாம் வல்லவரும், எல்லா முதன்மையையும் உடையவரும் ஆகிய முழுமுதற் கடவுள் ஒருவரே.

மணி—கடவுள் என்னஎன்ன தொழில்களைச் செய்கிறார்?

வேதவல்லி—முழு முதற் கடவுள் ஒருவரே. அவரே பிரமன் என்ற பெயரால் உலகத்தைப் படைக்கிறார்; அவரே விஷ்ணு என்ற பெயரால் உலகத்தைக் காக்கிறார்; மீண்டும் அவரே உருத்திரன் என்ற பெயரால் உலகத்தை அழிக்கிறார். பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் இந்த மூவரையும் திரிமூர்த்திகள் என்று சொல்லுவார்கள்.

மணி—படைத்தல், காத்தல், அழித்தல், என்றால் என்ன?

வேதவல்லி—படைத்தலாவது உயிர்களுக்கு எல்லாம் அவ்வவைகளுக்கு ஏற்ற உடம்பைக் கொடுத்தலாம். காத்தலாவது ஒவ்வொரு உயிரும் அதற்கு ஏற்றவாறு வாழும்படி செய்தலாம். அழித்தலாவது

உயிர்களுடைய உடம்புகளை எல்லாம் அழித்து விடுதலாம்.

மணி—கடவுளை நாம் எதனால் நன்றாக அறியலாம்?

வேதவல்லி—கடவுளை நாம் அவர் அருளிச் செய்த வேதங்களால் அறியலாம். அன்றியும் பெரியோர்கள் அருளிச் செய்த நூல்களாலும் அறியலாம். அல்லாமலும் இந்த உலகத்தைக் கொண்டும் அறியலாம்.

### பாட்டு

ஒன்றே கடவுள்; ஒன்றே வான்பொருள்;
ஒருவனே அயனாய் உலகைப் படைப்பான்;
ஒருவனே மாலாய் உவந்து காப்பான்;
ஒருவனே சிவனாய் ஒழித்தருள் வானே;
அவன் அருட் பெருமை அறைதலும் அரிதே.

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி.

திருவாசகம், மாணிக்கவாசகர்.

---

## 2. அழுத பிள்ளை பால் குடிக்கும்

சோழ நாட்டிலே சீகாழி என்ற ஒரு திருப்பதி உண்டு. இப்பொழுது அது தஞ்சாவூர் ஜில்லாவிலே சேர்ந்திருக்கிறது. அவ்வூரிலே ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிவபாத விருதயர்; அவர் வேதங்களை நன்றாகக் கற்றவர்; நல்ல ஒழுக்கம் உடையவர்; கடவுளிடத்திலே சிறந்த அன்புடையவர். அவர் கௌணியர் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவியார் பகவதியார் என்பவர். அந்த அம்மையார் மிகவும் மேன்மையான குணங்களை உடையவர்.

இவர்கள் இருவரும் எல்லாரும் புகழும்படி வாழ்ந்து வந்தார்கள். சிறிது காலம் சென்ற பிறகு பகவதியார் ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்தார். அப்பிள்ளை மிகவும் அழகாக இருந்தது; அதனுடைய முகம் பரந்து ஒளியுடன் விளங்கிற்று; கண்கள் செந்தாமரை மலரைப் போல மலர்ந்து இருந்தன; அப் பிள்ளையின் திருவாய் பவழம் போலச் சிவப்பாக இருந்தது; அக்குழந்தையின் தோள்கள் உருண்டு திரண்டிருந்தன; மார்பு அகலமாய் இருந்தது. அதைப் பார்த்தவர்கள் எல்லாரும் மகிழ்ச்சி அடைவார்கள்.

அக்குழந்தை நாளொரு மேனியாய் வளர்ந்து வந்தது. அச்சேயைப் பெற்றோர் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். அம்மகவு மூன்றும் வயதை அடைந்தது. அக்குழந்தையினுடைய செய்கைகள் மற்றக் குழந்தைகளைப்போல இல்லை. அவைகளைக் கண்டவர்கள் அந்தக் குழந்தை கடவுள் அருளால் பிறந்தது என்று சொல்லிக் கொண்டார்கள்.

குழந்தைக்கு மூன்றும் வயது நடக்கையில் ஒருநாள் சிவபாத விருதயர் நீராடுவதற்குப் புறப்பட்டார். அப்போது குழந்தையும் அழுது கொண்டு அவரைப் பின் தொடர்ந்தது. தந்தை

யார் குழந்தையைக் கோப முகம் காட்டி விலக்கினார். குழந்தையோ அழுகையை விட வில்லை; காலை உதறிக் கொண்டே வந்தது. அதைக் கண்ட தந்தையார், "ஆனால் வா," என்று சொல்லிப் பிள்ளையை எடுத்துக்கொண்டு போனார்.

சிவபாத விருதயர் தம் பிள்ளையோடு கோவிலுக்குப் போனார். அங்கே உள்ள திருக்குளத்துக் கரையை அடைந்தார். அந்தக் குளத்திற்குப் பிரம தீர்த்தம் என்று பெயர். தந்தையார் குழந்தையைக் கரையின்மேல் வைத்துவிட்டுத் தீர்த்தத்திலே இறங்கி முழுகினார். அப்பொழுது அச் சேய் பார்த்துக் கொண்டே இருந்தது. தந்தையார் முழுகும்போது அவருடைய தலை நீரிலே மறைந்தது. தந்தையார் காணமல் போனதால் குழவி அழத் தொடங்கியது. தந்தையாரோ குழந்தை அழுவதைப் பார்க்கவில்லை. குழந்தையோ தந்தையார் இருந்த திசையை விட்டு விட்டுக் கோயிலின் கோபுரத்தைப் பார்த்துப் பார்த்து அழுதது. அந்த மகவு, "அம்மா, அப்பா" என்று அழுதுகொண்டே இருந்தது.

அப்பொழுது அந்தக் கோயிலிலே எழுந்தருளி இருக்கும் தோணியப்பர் வெள்ளை எருதின் மேல் ஏறிக்கொண்டு, பிள்ளை இருக்கும்



ஞானப்பாலுண்ணுதல்

இடத்துக்கு வந்தார். அவருடனே உலகத்திற் கெல்லாம் தாயாகிய உமாதேவியாரும் வந்தார்கள்.

எல்லாருக்கும் அப்பனாகிய சிவ பெருமான் அம்மையாகிய தேவியாரைப் பார்த்து, "இந்தக் குழந்தைக்கு உன்னுடைய பாலைக் கறந்து ஊட்டு," என்று அருளிச்செய்தார். உடனே அம்மையார் தமது திருமுலைப் பாலைப் பொற் கிண்ணத்திலே கறந்து கொண்டார். பின் அவர், குழந்தையின் கண்ணீரைத் துடைத்து, அவருடைய கையிலே கிண்ணத்தைக் கொடுத்து ஊட்டினார். சிறுவர் அழுகையை நிறுத்தினார்; மைந்தர் திருப்பால் உண்டவுடனே அவருக்குப் பெரிய அறிவும், மிகுந்த கல்வியும் உண்டாயின. அவருக்கு எல்லாம் தெரிந்து விட்டது.

சிவபெருமானும், அம்மையாரும் மறைந்தருளினார்கள். சிறிது பொழுதிலே சிவபாத விருதயர் தம்முடைய கடன்களை முடித்துக் கொண்டு கரையேறினார். அவர், தம் செல்வ மகனாரைப் பார்த்தார். அவருடைய சிவப்பான திருவாயிலே வெண்மையான பால் ஒழுகியிருந்தது. அதைக் கண்டார் பிராமணர். அவர் பிள்ளை, யாரோ கொடுத்த பாலைக் குடித்ததாக எண்ணிக் கோபம் கொண்டார். பின் அவர்

குழந்தையைப் பார்த்து, "உனக்கு இந்தப் பாலைக் கொடுத்தவர் யார்? அவரை எனக்குக் காட்டு," என்று கையிலே ஒரு கோலை எடுத்துக்கொண்டு ஓங்கினார். பிள்ளையார் கண்ணீர் விட்டு, வானத்தைச் சுட்டிக் காட்டிப் பாடத் தொடங்கினார்.

சிவபாத விருதயர் திகில் அடைந்தார். அப்புறம் பிள்ளையார் கோயிலுக்குள்ளே சென்று கடவுளை வணங்கினார். அங்கே இருந்தவர்கள் எல்லாரும் திரண்டு உருண்டு பிள்ளையாருடைய பெருமையைக் கேட்டு வியப்பு அடைந்தார்கள். தந்தையார் ஆநந்தக் கூத்தாடினார். பிராமணர்களும், மற்றவர்களும் அந்தக் குழந்தையை வணங்கினார்கள். சிவபாத விருதயர் தமது தோளின்மேலே தம் அருமைக் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போகப் புறப்பட்டார். அப்பொழுது வாத்தியங்கள் ஒலித்தன; வேதியர் வேதம் ஓதினார்கள். அடியார்கள் வாழ்த்தினார்கள். தந்தையார் சீகாழியை வலஞ் செய்துகொண்டு தம்முடைய திருமாளிகையை அடைந்தார். பகவதியார் செல்வப் புதல்வருக்குக் கண்ணேறு கழித்தார். தமிழ் நாடு முழுவதும் மகிழ்ச்சி அடைந்தது. அன்று முதல் அந்தச் சிறுவர் திருஞான சம்பந்தர் என அழைக்கப்பட்டார். அவர் பாடுவதையே தம்முடைய தொழிலாகக் கொண்டார். அவர் திருவாய்

மலர்ந்தருளிய திருப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர்.

## திருப்பாடல்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.

அருநெறிய மறைவல்ல முனி அகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞான சம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

திருச்சிற்றம்பலம்

---

# 3. வேதம்

வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வியாச முனிவரால் பிரிக்கப்பட்டது என்று முன்னே தெரிந்து கொண்டோம். இப்பொழுது இந்த நான்கு வேதங்களிலும் பொதுவாக என்ன சொல்லப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுவோம்.

## இருக்கு

இருக்கு என்னும் சொல்லுக்குத் தோத்திரம் என்று பொருள். இது தோத்திரங்களை உடையது. இந்தத் தோத்திரங்களுக்கு மந்திரங்கள் என்றும் பெயர். இதிலே முனிவர் பலருடைய வரலாறுகளும், அவர்கள் சொல்லிய பாடல்களும் அவர் அவர்களுடைய பெயர்களாலேயே காணப்படுகின்றன. இதிலே பல அரசர்களின் பெயரும் இருக்கின்றன. இதில் பல தேவதைகளின் துதியும், முனிவர் அசுரர்களின் பெயரும் காணப்படுகின்றன. அக்கினி, வாயு, சூரியன் இவர்களைப்பற்றி இந்த வேதம் கூறுகிறது.

ஓம் என்னும் பதம் முழு முதற்கடவுளைக் குறிப்பதாக இது கூறுகிறது. இதில் ஒழுக்கங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. வசிஷ்ட முனிவர் கதையை இதிற் காணலாம். இதில் மழையை விரும்பிச் சூரிய பிரார்த்தனை செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இது யாகம் செய்யும் வகைகளையும், அரசர் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும் சடங்கையும் கூறுகின்றது. இருக்கு வேதத்தின் முடிவிலே இரண்டு உபநிடதங்கள் இருக்கின்றன.

ஆதலால் அவ் உபநிடதங்களுக்கு வேதாந் தங்கள் என்று பேர். வேதம்+அந்தம்—வேதாந் தம். வேதத்தின் முடிவிலே உள்ளவைகள் என்பது பொருள்.

### யசுர்

இவ்வேதம் நைவேத்தியங்கள், வேள்வி கள் செய்யும் வகை முதலியவற்றைக் கூறுகின் றது. இதிலே இராஜசூயம், அசுவமேதம், புரு ஷமேதம் முதலிய வேள்விகள் சொல்லப்பட் டிருக்கின்றன. மக்கள் படைப்பையும், உயிர்களின் பிறப்பு முதலியவற்றையும் இதிலே காணலாம். இதில் பல உபநிடதங்கள் இருக்கின்றன. இதி லும் பல தேவதைகளுக்கு மந்திரங்களும், பல ருடைய வரலாறுகளும் இருக்கின்றன.

### சாமம்

இதில் இலக்கணங்கள் அடங்கி இருக்கின் றன. தோத்திரங்களைப் பாடும் வகையும், விதி விலக்குக்களும் இதில் உள்ளன. இதிலிருந்து தான் சாங்தோக்கியம் என்னும் உபநிடதம் எடுத் தெழுதப்பட்டது.

### அதர்வணம்

இதிலே இருபத்தேழு நக்ஷத்திரங்கள் கூறப்பட் டிருக்கின்றன. பகைவரை வெல்லு

வதற்குப் பல மந்திரங்கள் இதில் காணப்படுகின்றன; கடவுள், உயிர், உலகம் முதலியவற்றைப் பற்றிக் கூறும் பல உபநிடதங்களை இதனுள் காணலாம்.

## உபவேதம்

ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், என்னும் நான்கும் உபவேதங்கள் எனப்படும். அவைகளில் ஆயுள் வேதம் மருந்துகளைப்பற்றிச் சொல்லும்; அருத்த வேதம் பொருள் ஈட்டும் வழிகளைச் சொல்லும்; தனுர் வேதம் வில் வித்தையைக் கூறும்; காந்தருவ வேதம் இசைகளைப் பற்றிக் கூறும்.

வேதத்துக்குச் சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம் என்னும் ஆறும் அங்கங்கள் எனப்படும். அங்கம்-உறுப்பு. இவைகளுள் சிக்ஷை வேதங்களை உச்சரிக்கும் வகையைத் தெரிவிக்கும்; கற்பம் வேதங்களில் சொல்லப்படும் கருமங்களைச் செய்யும் முறைமையை அறிவிக்கும்; வியாகரணம் வேதங்களின் எழுத்து, சொற்பொருள்களை விளக்கும்; நிருத்தம் வேதங்களின் சொற்பொருளை உணர்த்தும். சந்தோவிசிதம் வேத மந்திரங்களின் பெயரையும், அவைகளுடைய எழுத்துக்களின் அளவையும் காட்டும். சோதிடம் வேதத்திற்

சொல்லப்படும் கருமங்களுக்கு உரிய கால விசேஷங்களைக் கூறும்.

இன்னும் ஞானத்தை விளக்கும் ஆறு தரிசனங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் வேதத்தைத் தழுவியவைகளே. அவை நியாயம், வைசேஷியம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் என்பவைகளாம்.

---

## 4. திரிமூர்த்திகள்

பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவரும் திரிமூர்த்திகள் ஆவார்கள் என்று தெரிந்து கொண்டோம். இப்பொழுது அவர்களைப்பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொள்ள முயல்வோம்.

### பிரமன்

பிரமதேவர் உலகத்தைப் படைப்பவர்; அவருக்கு மனைவி சரஸ்வதி; அவர் அறிவுக்கு உரியவர்; அவருக்கு முகங்கள் நான்கு; அதனால் அவருக்கு நான்முகன் என்றும் பேர் உண்டு; அவருடைய ஊர்தி அன்னப்பறவை; நிறம் பொன்னிறம்; அவர் தாடியும் மீசையும் உடையவர்; அவர் தமது நான்கு கைகளிலும் ஜபமாலை, கமண்டலம், தண்டாயுதம், சுருக்கு,

சுருவம் என்னும் பொருளை வைத்திருக்கிறார் ; அவருடைய கொடியும் அன்னக் கொடியே ; அவர் இருக்கும் உலகம் சத்தியலோகம் ; அவர் தாமரை மலரில் வாழ்பவர் ; சரஸ்வதி அவர் நாவிலே வாழ்கிறாள்.

## விஷ்ணு

விஷ்ணு மூர்த்தி உலகத்தைக் காக்கும் கடவுள் ; அவருக்கு மனைவி திருமகள் ; அவருக்கு நான்கு திருக்கைகள் உண்டு; அவருடைய கொடி கருடன் ; ஊர்தியும் கருடனே ; அவருக்கு உலகம் வைகுந்தம்; பஞ்சாயுதங்கள் உடையவர் ; அவை சங்கு, சக்கரம், கதை, வில், வாள் என்பன ; விஷ்ணுமூர்த்தி நீல நிறமுடையவர் ; திருப்பாற் கடலிலே ஆதிசேஷன்மீது அறி துயில் செய்பவர் ; அவருடைய மாலை துளசி மாலை ; அவர் இலக்குமி தேவியை மார்பிலே வைத்திருக்கிறார்.

## உருத்திரன்

உருத்திர மூர்த்தி உலகத்தை அழிப்பவர் ; இவர் இருப்பிடம் கைலாயம் ; இவருக்குத் தேவியார் உமையம்மையார்; இவருடைய ஊர்தியும் கொடியும் எருது ; இவருடைய நிறம் செந் நிறம் ; இவருக்கு நான்கு திருத்தோள்களும், மூன்று திருக்கண்களும் உண்டு ; இவர் ஐந்து

முகங்கள் உடையவர்; கையிலே சூலம், மழு என்னும் படைகளை ஏந்தியவர்; சடைமுடியை உடையவர்; சடையிலே கங்கை, பாம்பு, பிறை இவைகளை அணிந்தவர்; இவருடைய மாலை கொன்றை மாலை; இவர் நீலகண்டம் உடையவர்; புலித் தோலாடை அணிந்தவர்; உமாதேவியார் இவருக்கு இடப்பக்கத்திலே இருக்கிறார்; இவருக்கு விநாயகர், முருகர் என்னும் மைந்தர்கள் உளர்.

## கலைமகள்

புத்தகம் செபவடம் புனித ஞானமா
முத்திரை குண்டிகை முழுதும் ஏந்தெழில்
கைத்தலத் தமிர்தினைக் கலைம டந்தையை
முத்தமிழ்க் கிழத்தியை முடிவ ணங்குவாம்.

—திருக்காளத்தி புராணம்.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்;
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்;
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்;
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்;
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

—திருவருட்பா, இராமலிங்கசுவாமிகள்.

## 5. யானை கண்ட குருடர் கதை

ஓர் ஊரிலே ஓர் அரசன் இருந்தான். அவன் நாட்டிலே இருந்த குடிகள் அடிக்கடி, "என் தெய்வம் பெரியது; என் தெய்வம் பெரியது" என்று சண்டை போட்டுக்கொண் டிருந்தனர். அதனால், அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் இருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டிக்கொண்டு அன்பு இல்லாதவராய் இருந்தனர். அதைக் கண்டு அரசன் கவலைப்பட்டான். இந்தத் துன்பத்தை நீக்க அவன் வழி தேடினான்.

ஒருநாள் அவன் ஆழ்ந்து எண்ண மிட்டுக் கொண்டு இருக்கையில், பெரியவர் ஒருவர் அவனிடம் வந்தார். அவர் நன்கு கற்றவர்; அவருக்குப் புத்தகங்களைப் படிப்பதும், எழுதுவதும், அங்கங்கே போய் மக்களுக்கு அறிவு புகட்டுவதும்தான் வேலை. அவருக்குக் கோபம் என்பதே கிடையாது; யார் என்ன பழித்தாலும் புன்னகை செய்து கொண்டு அவர்களோடு இனிமையாகப் பேசுவார். அரசன் அப்படிப்பட்டவரைக் கண்டதும் விழுந்துவணங்கி வரவேற்றான். பிறகு அவன் தன்னுடைய குறையை அவரிடம் சொன்னான். அவர் உடனே அரசனுக்கு நன்மொழி

கூறி, "அரசனே, உன்னுடைய நாட்டிலே உள்ள பிறவிக் குருடர்களை யெல்லாம் வருவிப்பா யாக?" என்று சொன்னார். அரசன் அவ்வாறே மறுநாளே பல குருடர்களையும் வரவழைத்தான். பிறகு பெரியவர் சொற்படி அரசன் ஊரிலே சண்டை செய்யும் எல்லோரையும் வரும்படி கட்டளையிட்டான். அவர்களும், மற்றக் குடிகளும் அரசன் சபையில் வந்து கூடினார்கள். பெரியவர் அரசனுடைய பட்டத்து யானையைக் கொண்டு வரச் சொன்னார். அப்படியே பட்டத்து யானை கொண்டுவந்து நிறுத்தப்பட்டது.

பின்பு பெரியவர் ஒவ்வொரு குருடராக அழைத்து, யானையைத் தடவிப் பார்க்கச் சொன்னார். அவர்கள் எல்லாரும் யானையை ஒவ்வொரு பக்கத்திலே தடவித் தடவிப் பார்த்துத் தங்கள் தங்கள் இடங்களில் இருந்தனர்.

பிறகு பெரியவர் ஒரு குருடரைத் தம்மிடம் அழைத்து, "அப்பா, யானையைப் பார்த்தாயா?" என்றார். அவன், உடனே, "பார்த்தேன்," என்று சொன்னான். பெரியவர், "அது எப்படி இருக்கிறது ? " என்று அவனைக் கேட்டார். அவன் யானையினுடைய காலை மட்டும் தடவிப் பார்த்தவன்; ஆதலால், "ஐயா, யானை உரல் போல இருக்கிறது," என்றான்.

பின்பு மற்றொரு குருடனை அழைத்து இப்படியே கேட்டார். அவன் யானையின் வாலைத் தொட்டுப் பார்த்தவன்; ஆதலால் அவன், “யானை ஒரு துடைப்பக் கட்டைபோல இருக்கிறது,” என்றான். அதன்மேல் அவர் வேறொரு குருடனைக் கேட்டார்; அவன் யானையின் காதுகளைப் பார்த்தவன். அதனால் அவன், “யானை ஒரு முறம் போல இருக்கிறது,” என்றான். இன்னொருவன் வந்தான்; அவன், தலையைப் பார்த்தவன். அவன், “யானை ஒரு குடம்போல இருக்கிறது,” என்றான். வேறொருவன் யானையின் துதிக்கையைப் பார்த்தவன்; அவன், “யானை உலக்கை போல இருக்கிறது,” என்றான்.

அப்பொழுது பெரியவர் அவர்கள் எல்லோரையும் பார்த்து, “நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகச் சொல்வதால் நீங்கள் ஒருவரும் யானையைப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன்,” என்றார். குருடர்களுக்குக் கோபம் மூண்டுவிட்டது. அவர்கள் பார்த்ததைப் பெரியவர் இல்லையென்றால் கோபம் வராதா? அவர்கள் ஒருவரோடு ஒருவர் தாங்கள் தாங்கள் பார்த்ததே யானையின் உண்மை வடிவம் என்று சொல்லிக்கொண்டு சண்டையிட்டார்கள். அதைக் கண்ட எல்லோரும் ‘கக்கட! கக்கட!’ என்று சிரித்தார்கள்.

அரசன் அவ்வேளையில் அங்கே, 'என் கடவுள் பெரியது; என் கடவுள் பெரியது' என்று சண்டைபோடுகிறவர்கள் எல்லாரையும் நோக்கி, "நாம் கடவுளைப் பற்றிப் பார்ப்பது இப்படித் தான் இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கத்தைப் பார்த்து விட்டுச் சண்டை செய்தல் கூடாது. கடவுளை உண்மையாய் அறிய ஒருவராலும் முடியாது. நாம் வீணைகச் சண்டை செய்தல் கூடாது," என்று கூறினான். எல்லோரும் பெரியவருடைய அறிவை மெச்சிக் கொண்டாடினார்கள். அன்றுமுதல் அவ்வூரார் சண்டையின்றி ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள்.

பாட்டு

ஆடிய பாதம் மன்றுடிய பாதம்
ஆடிய பாதம் நின்றுடிய பாதம்.
பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர் நேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம். (1)

தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்கள் எல்லாம் தெரிசிக்கும் பாதம்
வாரா வரவாகி வந்தபொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம். (2)

நல்லவர் எல்லாம் நயக்கின்ற பாதம்
நாத முடிவில் நடிக்கின்ற பாதம்

*வல்லவர்சொல் எல்லாம் வல்லபொற் பாதம்*
*மந்திர யந்திர தந்திர பாதம்.* (3)

*எச்சம யத்தும் இலங்கிய பாதம்*
*எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்குமாம் பாதம்*
*அச்சம் தவிர்த்தென்னை ஆட்கொண்ட பாதம்*
*ஆநந்த நாட்டுக் கதிபதி பாதம்.* (4)

*ஆருயிர்க் காதார மாகிய பாதம்*
*அண்ட பிண்டங்கள் அளிக்கின்ற பாதம்*
*சாருயிர்க் கின்பந் தருகின்ற பாதம்*
*சத்திய ஞான தயாநிதி பாதம்.* (5)

*தாங்கி எனைப்பெற்ற தாயாகும் பாதம்*
*தந்தையும் ஆகித் தயவுசெய் பாதம்*
*ஓங்கிஎன் உள்ளே உறைகின்ற பாதம்*
*உண்மை விளங்க உரைத்தபொற் பாதம்.* (6)

---

## 6. பிள்ளையார் குட்டு

நீங்கள் பிள்ளையார் கோவிலுக்குப் போய்க் குட்டிக் கொள்கிறீர்கள் அல்லவா? அது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? அதைப் பற்றி ஒரு வேடிக்கையான கதை உண்டு. அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள் :

நமது இந்து தேசத்திற்குத் தெற்கே இலங்கைத் தீவு இருக்கிறது. அதை ஒரு காலத்தில் இராவணன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்

தான். அவன் பத்துத் தலைகளும், இருபது கைகளும் உடையவன் ; மிகவும் வலிவுடையவன் ; அவனை வெல்ல எவராலும் முடியாது. ஆனால், அவன் நல்ல குணம் உடையவன் அல்லன். அவன் பிடிவாதமும், எவ்வளவு துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளத்தக்க நெஞ்சழுத்தமும் உள்ளவன்.

இராவணன் ஒரு காலத்திலே கைலாய மலையின் ஒரு சாரலிலே சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் செய்தான். அப்போது, சிவபெருமான் அவன் எதிரிலே தோன்றினர். அவரைக் கண்டதும் இராவணன் அவரை வாழ்த்தி வணங்கினன். சிவபெருமான் அவனை, "உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்," என்று கேட்டார். இராவணன், "அன்பின் பிழம்பே, நான் ஆளும் இலங்கை என்றும் அழியாதபடி வரங் கொடுக்க வேண்டும்," என்று கேட்டான். அப்பொழுது சிவபெருமான் ; அவன் கையில் ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து, "இதைக் கொண்டு போய்ப் பூசை செய் ; உன் எண்ணம் நிறைவேறும். இதைத் தூய்மையுடன்தான் தொட வேண்டும். இதைக் கீழே வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் இது மறுபடியும் உன்னிடம் வாராது," என்று கூறினர்.

இராவணன் சிவபெருமான் சொல்லிய படியே தன்னுடையகைகளிலே சிவலிங்கத்தைப் பயபக்தியோடு எடுத்துக்கொண்டு இலங்கையை நோக்கிப் போய்க்கொண் டிருந்தான்.

அப்படி அவன் போவது தெரிந்த இந்திரன், இராவணன் சிவலிங்கத்தைக் கொண்டு போய் இலங்கையில் வைத்துவிட்டால் அவனை வெல்ல முடியாதென்று எண்ணினன். அதனால், அவன் கயிலைமலையை அடைந்து, விநாயகரைக் கண்டு வணங்கினன். விநாயகர் அவனுடைய வேண்டுகோள் என்னவென்று கேட்டார். இந்திரன், "எப்படியாவது இராவணன் சிவலிங்கத்தை இலங்கைக்குக் கொண்டு போகாதபடி தடுக்க வேண்டும்," என்று வேண்டினன்.

விநாயகர், "அப்படியே ஆகட்டும்," என்று இந்திரனுக்கு அருளிச்செய்து அவனை அனுப்பிவிட்டார். பின் அவர், வருணனை அழைத்து இராவணன் வயிற்றிலே நீரைச் சுரப்பிக்கக் கட்டளை யிட்டார். வருணன் அவ்வாறே செய்தான். இராவணனுக்கு ஒன்றுக்குப் போகவேண்டியதாயிற்று. என்ன செய்வான்! கையிலே சிவலிங்கம் இருக்கிறது. அதையோ கீழே வைக்கக் கூடாது. நீரை அடக்கிக் கொள்ளவும் முடியவில்லை.

இப்படி இராவணன் இடர்ப்பட்டுக்கொண்டிருக்கும்போது, விநாயகர் ஒரு பார்ப்பனச் சிறுவனாக அவன் முன்னே தோன்றினார். சிறுவனைக் கண்டவுடன் இராவணன், "அப்பா, குழந்தாய், நான் போய் நீர்தொட்டு வருகிற வரையில் இந்தச் சிவலிங்கத்தை வைத்துக் கொண்டிரு; இதோ வந்து விடுகிறேன்," என்று அன்போடு கூறினான். அப்பொழுது விநாயகச் சிறுவர், "எனக்கு இதைத் தாங்கக் கூடிய வல்லமை இல்லை, இருந்தாலும் வைத்துக் கொண்டு இருக்கிறேன்; சுருக்காக வரவேண்டும்; என்னால் தாங்க முடியாவிட்டால் மூன்று தரம் கூப்பிடுவேன்; அதற்குள் நீ வராவிட்டால் கீழே வைத்துவிடுவேன்," என்று சொன்னார்.

இராவணன் துன்பம் பொறுக்க முடியாமல் அப்படியே ஒப்புக்கொண்டு போனான். அவன் போனவுடனே விநாயகர் மூன்று முறை அவனைக் கூப்பிட்டார். அவனுக்கு வர முடியவில்லை. விநாயகர் சிவலிங்கத்தைக் கீழே வைத்துவிட்டார்.

இராவணன் ஓடி வந்து பார்த்தான். சிவலிங்கம் பாதாளத்தில் அழுந்திவிட்டது. தன்னுடைய வல்லபம் முழுவதும் காட்டி அதை எடுத்தான். அது கிளுங்கவேயில்லை. அதைக்

கண்ட இராவணன் கோபம் கொண்டு பார்ப்ப னச் சிறுவனாக இருந்த விநாயகரைக் கன்னத் திற் குட்டினான். குட்டியவுடன் விநாயகர் அவ னைத் துதிக்கையால் தூக்கி எறிந்தனர். இராவ ணன் அங்கே எழுந்தருளியவர் விநாயகர் என அறிந்து, அவரை வணங்கினான். அப் பொழுது விநாயகர், "நீ நம்மைக் குட்டியது போலக் குட்டிக்கொள்," என்றனர். இராவ ணன் அப்படியே ஓங்கிக் குட்டிக் கொண்டான்.

விநாயகர், "உன்னைப் போலவே எம்மு டைய முன்னிலையில் யார் குட்டிக்கொண்டாலும் அவருடைய விக்கினத்தைப் போக்கி வேண்டிய வரங்களைத் தருவேன்," என்று அவனுக்கு அருள் புரிந்தார். அதனால்தான் எல்லாரும் விநாயகருடைய சந்நிதியில் குட்டிக்கொள்வது வழக்கம்.

பாட்டு

திருவாக்கும், செய்கருமங் கைகூட்டும், செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்,—உருவாக்கும்,
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

விநாயகனே வெவ்வினையை வேர்அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும்ஆம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

—கபில தேவ நாயனார்.

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர்—நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கை யாய்என்னோ
பின்னவலஞ் செய்வதேனோ பேசு.

—நம்பியாண்டார் நம்பி

## 7. சரவணபவன்

காசிபர் என்னும் முனிவருக்கும், மாயை என்பவளுக்கும் பிறந்த சூரபதுமன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் மிக வல்லவளாகிய தன் தாயிடம் உபதேசம் பெற்றுச் சிவபெருமானை நோக்கிப் பெரிய வேள்வி ஒன்றைச் செய்தான். அப்பொழுது சிவபெருமான், அவன் முன் தோன்றி அருள் செய்யவில்லை. அதன்மேல் சூரன் தன் வாளை உருவித் தனது இன்னுயிரை மாய்க்கத் தொடங்கினான். அவனுடைய மன உறுதியையும், உண்மையையும் கண்டு, சிவபெருமான் தரிசனம் தந்தார். சூரன் மகிழ்ந்து அவரை வணங்கி வரங்கேட்டான். இறைவனும் அவனுக்கு வயிர உடம்பையும் இந்திரஞாலம் என்னும் தேரையும், ஒருவருக்கும் பின்வாங்காத பெருவலிமையையும் அளித்தார்.

இந்த வரங்களைப் பெற்ற அசுரன் வீரமாகேந்திரம் என்னும் நகரத்திலே அரசாண்டு

வந்தான் ; அசுரர்களுக்குக் குருவாகிய சுக்கிர பகவானிடம் உபதேசம் பெற்றான்.

பின் இவன் தன் தாயின் சொற்படி திக்கு விஜயம் செய்து இந்திரன் முதலிய தேவர்களைப் பறக்க அடித்தான். இவன் பதுமகோமளை என்னும் பெண்மணியை மணந்து, பானுகோபன், அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்னும் புதல்வர்களைப் பெற்றான். இவனால் தேவர்களுக்கு மிக்க துன்பங்கள் விளைந்தன. இவனுக்கு அஞ்சி இந்திரன் குயிலுருவம் கொண்டு மறைந்தான். அதனால் தேவர்கள் இன்னது செய்வதென்று தெரியாமல் ஏங்கிக் கிடந்தனர். அவர்கள் பிரமதேவன், விஷ்ணுமூர்த்தி முதலியவர்களிடம் போய் முறையிட்டுக் கொண்டனர். அவர்களும் சூரனைத் தம்மால் வெல்ல முடியாதென்று சொல்லிவிட்டார்கள்.

பிறகு, தேவர்கள் எல்லாரும் கைலாயமலைக்குச் சென்றார்கள். அங்கே போனவர்கள் வாயுதேவனை அழைத்து, “ நீ போய்ச் சிவபெருமான் செவ்வியை அறிந்துவா,” என்று அனுப்பினார்கள். வாயுதேவர், “ தேவர்களே, இந்த வேலைக்கு என்னைத்தானா ஆளாக்க வேண்டும்? நான் அங்கே போனால் என்ன நேருமோ? ” என்று அஞ்சிக் கூறினார். தேவர்கள் மீண்டும்

அவரை வற்புறுத்தினுர். அவர் கடவுள் இருக்கும் இடத்தில் தென்றலாக மெல்ல நுழைந்தார். அப்போது அங்கே காவலாக இருந்த நந்திதேவர் .வாயுவின் வரவைத் தெரிந்து கொண்டு அவரை உரப்பினுர். உடனே வாயு தேவர் நடுநடுங்கித் தம்முடைய உண்மை உருவத்தோடு தோன்றி நந்திதேவரை வணங்கி நடந்தவைகளை எல்லாம் சொல்லினுர். நந்தியும் அவர் குற்றத்தைப் பொறுத்தருளி வெளியே போகும்படி அனுப்பினுர்.

வாயுதேவர் தேவர்களிடம் வந்து நடந்தவைகளைச் சொன்னுர். அப்போது தேவர்கள் எல்லாரும் ஒன்ருகச் சேர்ந்து, நந்தியிடம் சென்று தம்முடைய வருகையைச் சிவபெருமானுக்குத் தெரிவிக்கக் கூறினுர்கள். நந்தியும் இறைவருக்குத் தெரிவித்தார்.. பின்பு சிவபெருமான் கட்டளையின் படி தேவர்கள் உள்ளே புகுந்து அவரை வணங்கிப் போற்றினுர்கள்.

சிவபெருமான் தேவர்களை நோக்கி, "தேவர்களே, உங்கள் முறைப்பாடு என்ன? ஏன் இவ்வளவுஇடுக்கட்பட்ட நிலை உங்களுக்குவந்தது?" என்று வினவினுர். அவர்கள், " எல்லாம் வல்ல பெருமானே, சூரபதுமனுல் நாங்கள் படும் துன்பத்துக்கு அளவில்லை. இந்திரன் குயில் வடிவு

கொண்டு, மூங்கிற்பொதும்பரில் மறைந்திருக்கி ருன். எங்கள் ஒவ்வொருவருக்கும் சூரன் இடும் வேலைகள் மிகவும் அருவருக்கத் தக்கவைகளாக இருக்கின்றன. அவனுடைய கொடுமையினின் றும் எங்களை விடுவிக்க வேண்டியது தேவரீர் அருட்பாரம்,'' என்று வேண்டிக் கொண்டனர்.

சிவபெருமான் அவர்களை, "அஞ்சாதீர் கள்,'' என்று அருளிச்செய்து, தம்முடைய ஐந்து முகங்களோடு ஆருவதாக ஒரு முகத்தை யும் படைத்துக்கொண்டார். பின்பு அப்பெரு மான் ஒவ்வொரு முகத்திலும் உள்ள ஒவ்வொரு நெற்றிக் கண்ணினின்றும் ஒவ்வொரு பொறி யாக ஆறுபொறிகளைத் தோற்றுவித்தார். அவை கள் நெருப்புப் பிழம்பாக மிகவும் சூடுடையவை களாக இருந்தன. ஒருவரும் அண்ட முடிய வில்லை. கடல் வற்றியது. உமாதேவியாரும் அஞ்சி ஓடினர். உலகம் நடுங்கிற்று. தேவர்கள் எல்லாரும் உடம்பு வியர்த்தனர். ஆனல் அப் பொறிகள் அருளால் தோன்றியபடியால் எவ் வுயிரையும் வருத்த வில்லை. அப்பொழுது சிவ பெருமானை நோக்கித் தேவர்கள் ஓலமிட்டார் கள். சிவ பெருமான் உடனே, "தேவர்களே, அஞ்சாதீர்கள்,'' என்று சொல்லி, நெருப்புப் பொறிகளைத் தம்மிடம் வரும்படி எண்ணினர்.

உடனே அப்பொறிகள் ஆறுகி அவரிடம் வந்தன.

அப்பால் சிவபெருமான் வாயுவையும், அக்கினியையும் அழைத்து, "நீங்கள் இருவரும் இப்பொறிகளை எடுத்துக்கொண்டு போய்க் கங்கையில் விடுவீர்களாக," என்றார். அவ்வாறே அவர்கள் தாங்கிக்கொண்டு சென்று, அவைகளைக் கங்கையிலே விட்டார்கள். கங்கை அவைகளின் சூட்டைப் பொறுக்காமல், சரவணப் பொய்கையில் விடுத்தாள்.

அப்பொழுது பிரமதேவர் வானத்திலும், விஷ்ணுமூர்த்தி பூமியிலும், இந்திரன் முதலாய தேவர்கள் எட்டுத் திக்குக்களிலும்இருந்து, அப்பொறிகளைக் காத்துக்கொண் டிருந்தார்கள். சரவணப் பொய்கையும் சங்கரன் அருளால் வற்றுமல் குளிர்ந்திருந்தது. அந்த ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறின. அக்குழந்தைகளைக் கார்த்திகை முதலிய ஆறு பெண்களும் பாலூட்டி வளர்த்து வந்தனர். அவர்கள் அக்குழந்தைகளைத் தாமரை மலர்களின் மீது படுக்க வைத்தனர். அக்குழந்தைகள் அளவில்லாத திருவிளையாடல்களைச் செய்தன.

இப்படி இருக்கையில் சிவபெருமான் ஒரு நாள் உமாதேவியாரை நோக்கி, "உமையே, நம்

முடைய குமாரனைப் பார்த்துவிட்டு வருவோம் வா,'' என்றார். அம்மையும் மிகுந்த ஆவலோடு சரவணப் பொய்கைக்குச் சென்றனர். குழந்தைகளைக் கண்டு இருவரும் களிகூர்ந்தார்கள். குமாரர்களும் புன்சிரிப்புக் கொண்டார்கள்.

பிறகு நம்பெருமான், "உமையே, நீ உன் புதல்வனை எடுத்துக்கொண்டு வா,'' என்றார். அம்மையார் போய்ச் செந்தாமரை மலர்களின் இதழ்களின் மேலே கோடி சூரியப் பிரகாசத்தோடு இருந்த குழந்தைகளைத் தம்முடைய இரண்டு திருக்கரங்களாலும் வாரி எடுத்து மார்பிலே அணைத்துக்கொண்டார். அப்பொழுது அந்த ஆறு திருமேனிகளும், ஆறு முகமும், பன்னிரண்டு கைகளும் உடைய ஒரே குழந்தையாக மாறிவிட்டன. உமையம்மையார் முருகனைக் கொண்டு வந்து, அப்பனிடம் கொடுத்தனர். சிவபெருமான் மகனை மகிழ்ச்சியோடு வாங்கி மடிமீது வைத்துக்கொண்டனர். தேவர்கள் எல்லாரும் சிவபெருமானை வாழ்த்தினார்கள். சிவபெருமான், "தேவர்களே, இக்குமரனே சூரனைக் கொன்று உங்களைக் காப்பாற்றுவான்,'' என்று அருளிச் செய்தார். தேவர்கள் ஆநந்தக் கூத்தாடினார்கள்.

பின்பு கார்த்திகை முதலிய பெண்கள் இறைவன் எதிரிலே வந்து நின்றார்கள். அவர்



முருகன்

களைப் பார்த்து, சிவபெருமான், "பெண்களே, நீங்கள் தோன்றும் காலத்திலே யார் நமது குமரனை வழிபடுவார்களோ அவர்கள் எல்லாச் செல்வங்களையும் பெறுவார்கள்," என்று அருளிச் செய்தார். அப்பெண்கள் மகிழ்ந்து கடவுளை வணங்கிச் சென்றார்கள். பின் சிவபெருமான் முருகனோடும் கைலைமலைக்கு எழுந்தருளினார்.

சரவணப் பொய்கையில் அவதரித்தபடியால் முருகனுக்குச் சரவணபவன் என்று திருநாமம் உண்டாயிற்று. சரம் - நாணல், வனம் - நீர், பவன்-பிறந்தவன்; நாணற்புல் நிறைந்த பொய்கையில் பிறந்தவன் என்பது திரண்ட பொருள். உமையம்மையால் சேர்க்கப்பட்டதால் முருகனுக்குக் கந்தன் என்றும், (ஸ்கந்தம்-சேர்க்கை. ஸ்கந்தம் தமிழிலே கந்தம் என்று வரும்.) கங்கையிலே தோன்றியபடியால் காங்கேயன் என்றும், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயன் என்றும் பெயர்கள் உண்டாயின.

## பாட்டு

கருத்தே புகுந்து கதிகாட்டுங்
　　கண்ணே வருக, மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக, கருணைபொழி
　　காரே வருக, ஆனந்தப்
பெருக்கே வருக, யாங்கள் பெறும்
　　பேறே வருக, மறை சொல்கிளிப்

பிள்ளாய் வருக, பிறங்கு தெய்வப்
பெருமாள் வருக, குறமடந்தை
தருக்கே வருக, மிடிஅகற்றுந் தருவே
வருக, மன்பதைக்கோர்
தஞ்சே வருக, எம்மைஅளிக்குந் தாயே
வருக பவப்பிணிக்கு
மருந்தே வருக, சமரபுரி வாழ்வே
வருக வருகவே ;
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே. (க)

நண்ணேனே ! மகிழ்வினொடுந் திருத்தணிகை
மலையதனை நண்ணி என்றன்
கண்ணே, நீ அமர்ந்தஎழில் கண்குளிரக்
காணேனே ! கண்ணீர் வாரி
உண்ணேனே ! ஆனந்தக் கண்ணீர் கொண்டாடி
உனக் குகப்பாத் தொண்டு
பண்ணேனே! நின்புகழைப் பாடேனே !
வாயாரப் பாவி யேனே. (உ)

வாரேனே ! திருத்தணிகை வழிநோக்கி
வந்தென்கண் மணியே, நின்று
பாரேனே ! நின்னழகைப் பார்த்துலக
வாழ்க்கை, தனிற் படும்இச் சோபந்
தீரேனே ! நின்னடியைச் சேவித்தா
னந்தவெள்ளந் திளைத்தா டேனே !
சாரேனே ! நின்னடியார் சமுகமதைச்
சார்ந்தவர்தாள் தலைக்கொள் ளேனே. (ந)

# 8. திக்குப் பாலகர்

அஷ்டதிக்குப்பாலகர் என்றால் எட்டுத் திசைகளில் இருந்து காப்பவர் என்று பொருள். எட்டுத் திசைக்கும் எட்டுப்பேர் தலைவராக இருக்கின்றனர். அவர்கள் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்கள்.

## இந்திரன்

இந்திரன் கீழ்த்திசைப் பாலகன் ; தேவர்களுக்கு அரசன் ; காசிப முனிவருக்கும், அதிதி தேவிக்கும் பிறந்தவன்; இவனுடைய நகரம் அமராவதி ; இந்திராணி இவனுக்கு மனைவி ; இவனுடைய யானைக்கு ஐராவதம் என்றும், குதிரைக்கு உச்சைச்சிரவம் என்றும் பெயர் ; ஐராவதம் வெள்ளை நிறமும் நான்கு கொம்புகளும் உடையது ; குதிரையும் வெண்மை நிறமுடையதே ; இவனுடைய சபை சுதர்மை என்று சொல்லப்படும் ; இவனுடைய நகரத்திலே பஞ்ச தருக்கள் இருக்கின்றன ; அவை கற்பகம், சந்தானம், அரிச்சந்தனம், பாரிசாதம், மந்தாரம் என்பன ; இத்தருக்கள் ஒருவர் விரும்பிய பொருளைக் கொடுக்கும் ; இவையன்றிக் காமதேனுவும் அங்கே உண்டு ; அதுவும் விரும்பிய பொருளைக் கொடுக்கக் கூடியது ; இவனுடைய

நகரம் பொன் நிறமானதால் அதற்குப் பொன்னுலகு என்றும் பேர்; இவனுடைய மனைவியாகிய இந்திராணி எப்பொழுதும் பதினாறு வயதுடன் இருப்பவள் ; உலகத்திலே நூறு அசுவமேத யாகம் செய்தவர்கள் இந்திரப்பட்டத்துக்கு உரியவர் ஆவார்கள் ; இந்திரனைப் பற்றி முன்னாளிலே தமிழர் செய்து வந்த பண்டிகை இந்திர விழா எனப்படும் ; இவனைக் குறித்துச் செய்வது தான் போகிபண்டிகை ; போகி என்றால் இந்திரன் ; இவனுக்கு மேகமும் வாகனம் என்று கூறப்படும் ; இவனுடைய உடம்பு தங்கமயமாய் இருக்கும்; இவனுக்குக் கண்கள் ஆயிரம்; இவன் ஒரு காலத்தில் மலைகள் சிறகுகளுடன் பறக்க, அவற்றின் சிறகுகளை அரிந்தனன்.

## அக்கினி

அக்கினி விச்வாநரனுக்கு மகன் ; தென் கிழக்குத் திசைக்குத் தலைவன் ; இவன் மனைவி சுவாகாதேவி ; இவனுக்கு இரண்டு முகங்களும் ஏழு நாக்குக்களும், நான்கு கொம்புகளும், மூன்று அடிகளும் உண்டு; இவனுடைய நகரம் தேஜோவதி எனப்படும் ; வாகனம் ஆடு ; இவன் மகனுக்குக் குமரன் என்று பெயர் ; இவன் சூரியன், சந்திரன் ஆகிய இவைகளிடத்தில் ஒளியாகவும், மேகத்திலே மின்னலாகவும், பூமியில் தீயாகவும்,

கடலிலே வடவையாகவும், எல்லா உயிர்களிடத்திலேயும் ஜடமாகவும் இருப்பவன்; ஜடம் என்பது ஒவ்வொருவரும் உண்ணும் உணவைச் செறிக்கச் செய்யும்; அக்கினிக்கு ஜபமாலை, கமண்டலம், நாகாசனம் முதலியவை உண்டு; நிறம் சிவப்பு.

## இயமன்

இயமன் கருநிறமும், கோரப் பற்களும் உடையவன்; தென் திசைக்குத் தலைவன்; சூரியனுக்கும் சாயாதேவிக்கும் பிறந்தவன்; இவன் எல்லா உயிர்களையும் அழித்து, அவர் அவர்கள் செய்த நன்மை தீமைகளின்படி இன்பதுன்பங்களை அளிப்பான்; இவனுடைய நகரம் சையமனி என்பது; இவனுக்குத் தண்டம் பாசம் முதலிய படைகளும், எருமைக்கடா வாகனமும் உண்டு; இவன் மனைவி சர்மளை; இவனுக்குத் தர்மராஜன் என்றும் பெயர்.

## நிருதி

நிருதி தென்மேற்குத் திசைக்குத் தலைவன்; இவன் பட்டணம் கிருஷ்ணங்கனை; மனைவி தீர்க்காதேவி; வாகனம் பூதம்; ஆயுதம் குந்தம்; இவனுடைய உலகத்தை நன்மை செய்தவர் இழிந்தவர்களாக இருந்தாலும் அடைவார்கள்; இவன் இரத்தக் கண்களும் நீலோற்பல நிறமும் உடையவன்.

## வருணன்

வருணன் வெண்மை நிறமும், நாகபாசமும், மகராசனமும் உடையவன்; கருத்தமப் பிரசாபதிக்கும், தாம்ரை என்பவளுக்கும் பிறந்தவன்; இவன் மனைவி சேஷ்டை என்பவள்; இவனுக்குத் தருமன் என்னும் புதல்வனும், சுரந்தை வாருணி என்னும் புதல்வியர்களும் உளர்; இவன் மேற்றிசைக்குத் தலைவன்.

## வாயு

வாயு பெருத்த உருவமும், பச்சை நிறமும், மான் வாகனமும் உடையவன்; வடமேற்றிசைக்குத் தலைவன்; இவனுக்கு அஞ்சனை என்பவள் மனைவி; இவனுடைய பட்டணம் கந்தவதி; ஆயுதம் துவசம்; இவன் காசிபருக்குப் புதல்வன்.

## குபேரன்

குபேரன் நரவாகனமும் வளர்ந்த உருவமும் பொன்னிறமும் உடையவன்; இவன் ஆயுதம் கதை; இவன் விசிரவசு முனிவருக்கும், இளிபிளை என்பவளுக்கும் பிறந்தவன்; இவன் பட்டணம் அளகாபுரி; மனைவி சித்திரரேகை; விமானம் புஷ்பகம்; இவன் வடதிசைக்குத் தலைவன்; செல்வத்திற் சிறந்தவன்; சிவபெருமானுக்குத் தோழன்.

### ஈசான்ன்

இவன் வடகீழ்த்திசைக்குத் தலைவன்; படிக நிறமுடையவன்; சூலப்படையும், பாம்பாகிய ஆபரணமும், முக்கண்ணும் இவனுக்கு உண்டு.

---

## 9. வாமனர்

நெடுங்காலத்துக்கு முன்னே விரோசனன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவனுக்குத் தேவி என்பவள் மனைவி. அவள் அழகிய வயிற்றிலே பலிஎன்னும் அசுரன் பிறந்தான். பலி வீரர்களுக்குள்ளே முதன்மையானவன்; அவன் ஒரு வேள்வி செய்து, அதன் பயனாகக் குதிரை, தேர், சிங்கக்கொடி, வில், இரண்டு அம்பறாத்தூணி என்னும் பொருள்களைப் பெற்றான். பின்பு இவன் தன் குலத்துக் கெல்லாம் ஆசிரியராகிய சுக்கிர பகவானிடம் சங்கு தரப்பெற்றான். இத்தகைய சிறப்புக்களை யுடைய பலி மண்ணுலகில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய்ச் சிறந்து விளங்கினான்; அதனால் அவன் செருக்கு மிகுந்து, விண்ணுலகத்தையும் கைக்கொள்ள விரும்பித் தேவரை எதிர்த்து அவர்களிடத்து வெற்றிகொண்டான்.

பின்பு, அவன் பின்னுஞ் சிறப்படையும் பொருட்டு அசுவமேதம் செய்யத் தொடங்கிச்

சடங்குகளை மிக்க ஊக்கத்துடன் செய்து வந்தான். அப்பொழுது, தேவர்கள் எல்லோரும் அஞ்சி நடுங்கினார்கள்.

இப்படி இருக்கையில், காசியபர் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார் ; அவருக்கு அதிதி என்னும் அருமை மனைவி ஒருத்தி உண்டு. அவள் அழகும் குணமும் ஒன்றாகத் திரண்டு ஒரு வடிவை எடுத்தாற்போல, மிக்க பேரழகும், அதற் கேற்ற பெருங்குணங்களும் வாய்ந்தவள். திருமால் உலகத்திலே தோன்றிய தீமைகளை ஒழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் திருவுளங்கொண்டு அதிதியினுடைய திருமணி வயிற்றிலே அழகிய வாமனராய் அவதரித்தார்.

அவதரித்த அச்செல்வ மகவு வேதமே உருக்கொண்டு வந்தது போல விளங்கிற்று. அதன் தன்மை வைதிக ஒழுக்கத்துக்கும், கல்விக்கும் உரிமை உடையதாகக் காணப்பட்டது. அதற் கேற்றவாறு சூரியன் அக்குழவிக்குச் சாவித்திரி மந்திரத்தை உபதேசித்தான் ; வியாழபகவான் பிரம சூத்திரத்தை ஓதி வைத்தான் ; தந்தையாகிய காசியபர் முஞ்சியைக் கொடுத்தார் ; அதிதி கௌபீனம் கொடுத்தாள் ; பூமி கிருஷ்ணாசனம் தந்தது ; சந்திரன் தண்டம் தந்தான் ; பிரமதேவன் கமண்டலம் ஈந்தான் ; குபேரன் பாத்தி

ரம் அளித்தான்; பார்வதி தேவி பிக்ஷை இட்டாள்.

வாமனர் பாரத்துவாசமுனிவரிடம் வேதங்களை உணர்ந்தார்; பின்பு தேவர் வேண்டுகோளுக்கு இரங்கி, வாமனர் பலியின் செருக்கை அடக்கித் தேவர்களைத் துன்பத்தினின்றும் விடுவிக்க அவன் யாகசாலையைக் குறுகினுர். அப்பொழுது பலி யாகத்திலே கண்ணும் கருத்துமாய் இருந்தான். வாமனர் அவன் எதிரே நின்று, " சக்கரவர்த்தியே, எனக்கு யாகசாலையில் மூன்றடி மண் தர முடியுமா?" என்று கேட்டார். உடனே பலி, உள்ளம் உவந்து 'ஈந்தேன்' என்று சொல்ல வாயெடுத்தான். அப்பொழுது அங்கே எழுந்தருளியிருந்த அவனுடைய குல குருமணியாகிய சுக்கிரபகவான், குறள் வடிவத்தோடு அங்கே வந்திருப்பவர் விஷ்ணு மூர்த்தியே என்று நொடிப்பொழுதிலே தெரிந்துகொண்டார். அதனுல் அவர் கருத்தாய்ப் பார்த்துக்கொண்டே இருந்து வாமனர் மண் கேட்டவுடன் பலியைப் பார்த்து, " சக்கரவர்த்தியே, பொறு! பொறு!! இப்பொழுது மாணியாக வந்துள்ள குறளர் திருமாலே. அவருக்குச் சிறிது இடங்கொடுத்தால் பூமியையும் ஆகாயத்தையும் ஒன்ருகக் கொள்வார்! வேண்டாம்—வேண்டாம்," என்று தடுத்தார்.

அதைக் கேட்ட பலிச்சக்கரவர்த்தி சுத்த வீரன் ஆதலால் அவரை நோக்கி, "குரு மணியே, ஒருவன் ஒரு பொருளை 'ஈ' என்று கேட்பது இழிவு; அதைக் காட்டிலும் இழிந்தது அவற்கு 'ஈயேன்' என்று சொல்வது. ஆகையால், என் உயிருக்கே கேடுவந்தாலும், நான் 'இல்லை' என்று சொல்லமாட்டேன்," என்று கூறி, வாமனரை நோக்கி, "மூன்றடி மண் தந்தேன்," என்றான். சுக்கிரபகவான் தன் சொல்லைக் கடந்ததற்காக மாணுக்கனைச் சபித்தார்.

அப்புறம் பலி, தான் குடத்தினின்று நீரை வார்த்து வாமனருக்குத் தானம் செய்கையில் சுக்கிரபகவான் அந்தக் குடத்தின் வாயிலே இருந்து, நீர் வீழாமல் தடுத்தான். அப்போது அதை அறிந்துகொண்ட வாமனர் தருப்பையி ஞல் அக்குடத்தின் வாயைக் குத்தச் சுக்கிரன் கண் குருடாயிற்று.

தானத்தைப் பெற்றுக் கொண்ட வாமன மூர்த்தி தம்முடைய குறள் வடிவத்தை மாற்றி ஆகாயமும் பூமியும் ஒன்ருகும்படி நெடுமாலாக வடிவெடுத்தார். எல்லாரும் நடுங்கினர்கள். பின், திரிவிக்கிரம மூர்த்தி தமது இரண்டு திருவடிக ளாலும் மூன்று உலகங்களையும் அளந்துவிட்டு, சக்கரவர்த்தியை நோக்கி, "வள்ளலே, எனக்கு

இன்னும் ஓரடி மண் எங்கே?" என்று கேட்டனர். சக்கரவர்த்தி உடனே உவகையோடு தன்னுடைய தலை இறங்கி, 'இதோ' என்று காட்டினன். அத் திருத்தலையின்மேல் வாமனர் தம் செந்தாமரை மலரினும் சிவந்த திருவடியைச் சூட்டி, "அப்பா, உன் அன்பும் கொடையும் வீரமும் யாருக்கு உண்டு? உன் செய்கைக்கு மிகவும் மகிழ்ந்தோம்; நீ சிறிது காலம் பாதாள லோகத்தில் அரசு புரிந்து வாழ்ந்து, பிறகு இந்திர பதவியை அடைவாயாக," என்று அவனுக்குத் தண்ணீரிலும் குளிர்ந்த மொழிகளைக் கூறித் திருவருள் செய்து மறைந்தருளினர். பலியும் அவரைப் பலவாறு வாழ்த்தி அவர் கட்டளையின் படியே பாதாளத்தை அரசாண்டு வாழ்ந்தான்.

---

## 10. துருவன்

நெடுங்காலத்துக்கு முன்னே வடமதுரையில் உத்தானபாதன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு மனைவிமார் இருந்தார்கள். அவர்களில் சுருசி என்னும் பெயருடையவள் இளையவள்; அவளே அரசனுக்கு மிகவும் விருப்பமுடையவளாக இருந்தாள். சுநீதி என்பவள் மூத்தவள்; அவளிடத்தில் அரசனுக்கு விருப்பம் இல்லை.

இப்படி இருக்கையில் சுருசிக்கு உத்தமன் என்ற ஒரு புதல்வன் பிறந்தான். அவனிடத்திலே அரசன் அதிக அன்பு காட்டினான். சுநீதிக்குத் துருவன் என்னும் ஒரு மைந்தன் தோன்றினான். அவன் சிறந்த குணங்கள் உடையவனாக இருந்தான். இந்த இரண்டு பிள்ளைகளும் வளர்ந்து வந்தார்கள். துருவன் ஐந்தாவது வயதை அடைந்தான். ஒருநாள் அரசன் சிங்காசனத்தில் வீற்றிருந்தான். அப்போது உத்தமன் அவன் மடியிலே உட்கார்ந்திருந்தான். அதைப்பார்த்த சிறுவனாகிய துருவன் தானும் தன் தந்தையின் மடியின்மேல் இருக்க அரசனைக் கிட்டினான். அப்பொழுது அரசன் சுருசிக்குப் பயந்து, துருவனுக்கு இடங் கொடுக்காமலே இருந்தான். சுருசி இதை அறிந்து துருவனைப் பார்த்து, "அடா, துருவா, நீ அரசன் மடியின்மேல் இருக்க ஆசைப்படாதே. என் மகனே அரசுக்கு உரிமை உடையவன். நீ அவனைப் போலவே இருக்க வேண்டும் என்று எண்ணுவது வீண்," என்று இழிவாகச் சொன்னாள். அரசனும் பேசாமல் இருந்தான். துருவன் இதைக்கேட்டு மருண்டு தன் தாயிடம் போனான். அவனுடைய கண்கள் சிவந்திருந்தன; உதடு துடித்தன. சுநீதி தன் மகனை எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு, "அப்பா, நீ ஏன் இவ்வளவு கோபமாக இருக்கி

றாய்? உனக்கு யாராவது குறை செய்தார்களா?'' என்று கேட்டாள்.

துருவன் சுருசி சொன்ன சொற்களை எல்லாம் தாயாருக்குச் சொன்னான். அவள் பெருமூச்சு விட்டு, வருத்தம் அடைந்தாள். பின்பு அவள் தன் மைந்தனைப் பார்த்து, "அப்பா, குழந்தாய், சுருசி நல்ல தவம் செய்தவள்; அதனால் அரசனுக்கு விருப்பம் உடையவளாக இருக்கிறாள். அந்த இறுமாப்பால் உன்னை அப்படித் தாழ்மையாகப் பேசினாள். நாம் என்ன செய்யலாம்?'' என்றாள்.

துருவன், "அம்மா, சுருசி தவத்தினாலே சிறந்தவளானாள் அல்லவா? அதைப்போலவே நானும் மேன்மையான தவத்தைச் செய்து அவளைக் காட்டிலும் மேலான பதவியை அடைவேன்,'' என்றான். அதைக் கேட்ட, சுநீதி, "அடா கண்மணி, உனக்கு இன்னும் ஐந்து வயது கூட நிறைய வில்லையே! நீ தவஞ் செய்வது எப்படி? நான் உன்னைப் பிரிந்து உயிரோடு இருப்பேனா?'' என்று சொல்லி வருந்தினாள்.

துருவன் தாயாரைத் தைரியமாக இருக்கும்படி சொல்லிவிட்டு, அந்த நகரத்துக்குப் பக்கத்திலே உள்ள ஒரு காட்டுக்குப் போனான். அங்கே

முனிவர்கள் பலர் தவஞ் செய்து கொண்டு இருந்தார்கள். துருவன் அவர்களுடைய திரு வடிகளின்மேல் விழுந்து வணங்கித் தனக்கு நேர்ந்த அவமானத்தை எடுத்துச் சொன்னான். அவர்கள் எல்லாரும் கேட்டு அவனுடைய குணத்தை மெச்சினார்கள்.

பிறகு துருவன் அவர்களிடம் தனக்கு யாரும் அடையாத பதவி வேண்டும் என்று கேட் டான். அவர்கள் அவனிடம் இரக்கம் வைத் துத் திருமாலுடைய பெருமைகளை எடுத்துச் சொன்னார்கள்; விஷ்ணு மூர்த்தியை நோக்கித் தவம் செய்யச் சொன்னார்கள். அவனும் அப் படியே ஒரே மனமாக வேறொன்றையும் நினைக் காமல் கடுந்தவம் செய்தான்.

துருவன் கடுந்தவத்தைக் கெடுக்க இந்தி ரன் முயன்றான். அவன் தன்னுடைய பதவி யைத் துருவன் அடைந்திடுவானோ என்று அஞ் சினான். அதனால் தேவேந்திரன் பூதங்களை ஏவி னான். அவைகள் துருவன் தாயைப் போலவும், பேயைப் போலவும் உருவம் கொண்டு அவனி டம் போயின. சில பூதங்கள் சிங்கம், புலி முதலிய விலங்குகளைப் போல அவனைப் பயமுறுத்தின.

தாயைப் போலப் போன பூதம் அவனைப் பார்த்து, " அப்பா, கண்ணே, நீ என்னை விட்டு

விட்டு வந்தாயே! உன்னை நான் விட்டு இருக்க மாட்டேன்; அஞ்சு வயது கூட ஆகவில்லையே; உனக்குத் தவம் ஏன்? இப்படித் தவம் செய்தால் உன் உடம்பு மெலிந்து போகுமே! என்னுடன் நீ வராவிட்டால் இதோ பார்! என் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்," என்று கண்களில் தாரை தாரையாய் நீரைச் சொரிந்து கொண்டு நின்றது.

சிங்கங்களாகவும், புலிகளாகவும், நரிகளாகவும் உருவெடுத்த பூதங்கள் பயங்கரமாகக் கர்ச்சனை செய்து உருமின; மேலே பாய்ந்தன. சில பூதங்கள் இராக்ஷதர்களைப் போல விகார வடிவத்தோடு "வெட்டுங்கள்! குத்துங்கள்! கொல்லுங்கள்!" என்று கூவிக்கொண்டு துருவனை நோக்கி ஆயுதங்களைக் காட்டின.

இவைகள் ஒன்றும் துருவனுக்குத் தெரியவே யில்லை. அவன் எம்பெருமானுடைய திருவடிகளிலேயே ஈடுபட்டுக் கிடந்தான். அப்பால் தேவேந்திரன் ஒன்றும் செய்யமுடியாமல் துருவனுடைய பெருமையைப் பாராட்டிச் சும்மா இருந்தான்.

பின்பு, விஷ்ணுமூர்த்தி துருவன் எதிரே தோன்றினர். அவர் அவன் அருகிலே போய், "அன்பனே, உன்னுடைய தவத்துக்கு மகிழ்ந்

தோம்; உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்,'' என்றார்.

துருவன் கண்களைத் திறந்து பார்த்தான்; திருமாலின் அழகிய உருவத்தைக் கண்டான்; இன்பக் கடலிலே மூழ்கினான்; ஆடினான்; பாடினான். பின் அவரைப் பார்த்து, "அருட் கடலே, நான் தேவரீரைத் தோத்திரம் செய்வதற்குத் தகுந்த ஞானத்தை அடையும்படி அருள் செய்ய வேண்டும்,'' என்று கேட்டான்.

திருமால் உடனே அவன் முகத்தைத் தமது திருக்கரத்தால் தடவினார். அவ்வளவிலே துருவன் ஞானம் முழுவதையும் அடைந்துவிட்டான். பிறகு, அவன் விஷ்ணுமூர்த்தியினுடைய திருவடித் தாமரைகளை வணங்கி, "என் அன்பே, அடியார்கட்கு எளியவனே, என் தாயான சுருசி என்னை அவமானப்படுத்தினாள். அவள் இருக்கும் பதவியைக் காட்டிலும் மேலான பதவியை நான் அடையும்படி அருள் செய்யவேண்டும்,'' என்று வேண்டினான்.

விஷ்ணுமூர்த்தி மகிழ்ந்து, "அன்புள்ள குழந்தாய், நீ வானத்திலே எப்பொழுதும் அழியாமல்இருக்கிற திவ்யஸ்தானத்தை அடைந்து, இன்பமாக வாழ்வாயாக. உன் தாயும் விமானத்தின்மேல் ஏறிக்கொண்டு அங்கே உன்னிடம் வந்து சேருவாள். நீங்கள் இரண்டுபேரும்



துருவன் அருள் பெறுதல்

நக்ஷத்திர உருவத்தைப் பெற்று என்றும் நன்ருக இருப்பீராக,'' என்று வரங்கொடுத்து மறைந்தருளினர்.

துருவன் கடவுளுடைய அருளை நினைத்துக்கொண் டிருந்தான். சிறிது நேரத்திற் கெல்லாம் அவன் சிறந்த உலகத்தை அடைந்தான். அவ்வுலகத்திற்குத் துருவமண்டலம் என்று பெயர். அதை நீங்கள் வானத்தில் இப்பொழுதும் பார்க்கலாம். தாயாகிய சுநீதியும் அவனிடம் வந்து சேர்ந்தாள். அவன் பெருமையை உலகத்தார் எல்லாம் இன்றும் பாராட்டுகிருர்கள்.

## பாட்டு

### திருமகள்

வெண்பா

'செந்தா மரைமலரிற் சேர்ந்திருக்கும் அன்னமே
எந்தாயே கண்ணே எழில்முன்பு—வந்தார்க்கு
வாழ்வும் பெருந்திருவும் வண்மையொடு கல்விவரும்
தாழ்வு வருமோ தமக்கு. (க)

தனியேன் துயரெல்லாந் தாயே ஒழிக்க
இனியேன்நீ சும்மா இருத்தி ;—கனியே
திருமால் அருமார்பிற் சீராக மேவும்
பெருமாட்டி எற்கொருசொல் பேசு. (உ)

காரழகு தோற்குங் கருங்கூந்தற் காரிகைஉன்
பேரழகுக் கொப்பாகப் பேசுவதென்—யாரழகும்
உன்னழகே அம்மே, உயர்வும் பெருவாழ்வும்
பொன்னழகே என்னும் புவி. (ங)

எங்கெங்கே நல்லழகும் ஏத்தும் பெருஞ்சிறப்பும்
அங்கங்கே நீயே அமர்ந்துறைவாய்—செங்கமலத்
தேனே திருவே தெவிட்டாத தெள்ளமுதே
நானே மகிழஅருள் நல்கு. (௪)

## 11. விளையாட்டு வினையானது

வட இந்தியாவிலே அயோத்தி என்றொரு பட்டணம் உண்டு. அது முற்காலத்தில் மிக மேன்மையாக இருந்தது. அந்தப் பட்டணத்தைத் தசரதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குக் கௌசலை, கைகேயி, சுமித்திரை என்னும் பெயரை உடைய மூன்று மனைவிமார் இருந்தனர். அவர்களில் மூத்தவளாகிய கௌசலைக்கு இராமன் என்னும் ஒரு மகனும், கைகேயிக்குப் பரதன் என்னும் புதல்வனும், சுமித்திரைக்கு இலக்குமணன், சத்துருக்கனன் என்னும் இரண்டு மைந்தர்களும் பிறந்தார்கள்.

தசரத மன்னன் இந்த நான்கு மைந்தர்களையும் அன்பாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தான். அவனுக்கு மூத்த மகனாகிய இராமனிடத்தில் மிகவும் விருப்பம். இராமனும் அழகு, குணம் முதலியவைகளால் எல்லாரைக் காட்டிலும் சிறந்திருந்தான்.

இவர்கள் நால்வரும் ஒன்றாகக் கூடி விளையாடுவார்கள். அப்போது, கைகேசியின் அரண்

மனையிலே மந்தரை என்றொரு தாதி இருந்தாள். அவள் கூனி. அவளை இராமன் காணும்பொழு தெல்லாம் விளையாட்டாக வில்லிலே ஒரு மண் ணுண்டையை வைத்துக் கூனின்மேல் அடிப் பான். அவளும் அதைப் பாராட்டாதவள் போலப் போய்விடுவாள். இராமனும் இந்த விளையாட்டைப் பல முறைகளில் செய்து வந் தான். கூனி பேசாமல் போய்விடுவது வழக்கம். ஆனாலும் அவளுக்கு உள்ளே கோபம் அதிகம் இருந்தது. அதனால் அவள் தன் வஞ்சத்தைத் தீர்க்க வழி பார்த்துக்கொண் டிருந்தாள். இப் படிப் பல நாள் ஆயின.

தசரத ராஜன் இராமனுக்குப் பட்டாபிஷே கம் செய்யத் தீர்மானித்தான். அவன் சபையிலே இருந்த மந்திரிமார்களும், குடிகளும் அவன் கருத்துக்கு இணங்கினார்கள். அயோத்தி நகரத் தார் எல்லாரும் அதைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

ஆனால், மந்தரை மாத்திரம் மகிழவில்லை. அவளுக்கு, இராமன் பட்டத்துக்கு வருவது சிறிதும் பிடிக்கவில்லை. சிறுவயதிலே இராமன் உண்டையால் தன் கூனின் மேலே அடித்ததை அவள் நினைத்துக்கொண்டாள். அவளுக்குக் கோபம் பொங்கிற்று. எப்படியாவது அந்தக் காரியத்தை நிறுத்தவேண்டும் என்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

அதனால் அவள் தன்னுடைய தலைவியான கைகேசியிடம் போனாள்; அவள் மனத்தைக் கலைத்தாள்; இராமன் பட்டத்தை அடைந்தால் கைகேசிக்கு நன்மை இல்லை என்றும் அவளுடைய சீரும் சிறப்பும் போய்விடும் என்றும் அவளுக்குச் சொன்னாள்.

கைகேசி முதலிலே அவளுடைய கெட்ட எண்ணத்துக்கு ஒத்துக்கொள்ள வில்லை; அவளைக் கோபித்துக் கொண்டாள். ஆனால் மந்தரை அவளை விடவில்லை. கைகேசியின் மனங் கலங்கும்படி அநேக விஷயங்களை எடுத்துக் காட்டினாள். கடைசியில் அவளும் ஒப்புக் கொண்டாள். அப்புறம் கைகேசி தசரதனைக் கேட்டு இரண்டு வரம் பெற்றாள்; ஒரு வரத்தால் இராமன் காட்டுக்குப் போகவும், மறு வரத்தால் பரதன் நாட்டை ஆளவும் வேண்டினாள்.

தசரதன் வரங்களை இன்னவென்று தெரியாமலே நெடுங்காலத்துக்கு முன்னமே கைகேசிக்குக் கொடுத்து விட்டான். அதனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இராமன் இளமையில் செய்த விளையாட்டு வினையாய் முடிந்தது. அதனால் நாடாள இருந்த இராமன் காடாள நேர்ந்தது. பிள்ளைகளே, நாம் ஒருவரையும் விளையாட்டாகவும் இகழக்கூடாது.

## 12. ஒழுக்கம்

ஒழுக்கம் என்ற சொல்லுக்கு முறையாக நடத்தல் என்று பொருள். ஒருவன் ஒழுக்கம் இல்லையானால் எவ்வளவு கல்வி கற்றாலும் பயன் இல்லை; எவ்வளவு அறிவு இருந்தாலும் மேன்மை உண்டாகாது. கல்வியினால் அறிவைப் பெறவேண்டும்; அறிவினால் ஒழுக்கத்தைக் கைக்கொண்டு பழக வேண்டும். ஒருவன் தன் உயிரை எவ்வளவு கவலையுடன் பாதுகாத்துக் கொள்வானோ அதுபோலவே தன்னுடைய ஒழுக்கத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கல்வி உடையவரைக் காட்டிலும் ஒழுக்கம் உடையவருக்குச் சிறப்பு உண்டு. ஒழுக்கத்தை நெகிழ விட்டவன் இவ்வுலகத்திலே புகழை விட்டவனாவான்; அவனுக்கு மறு உலகத்திலும் வரும் துணை யில்லை. எல்லா நன்மைகளுக்கும் ஒழுக்கமே வித்தாக உள்ளது.

நல்ல குலத்திலே பிறந்ததனால் மட்டும் யாவருக்கும் பெருமை உண்டாக மாட்டாது; அக்குலத்துக் குரிய ஒழுக்கத்தில் நின்றால் தான் யாரும் பெருமை அடையலாம். அப்படியே உயர்ந்த குடியிலே பிறந்தவன் அக்குடிப் பிறப்பிற் கேற்ற ஒழுக்கம் உடையவனாக இருந்தால்தான் உலகத்தார் அவனை மேன்மைப் படுத்துவார்கள். தாழ்ந்த குலத்திலே பிறந்தவனானாலும் ஒருவன் ஒழுக்கத்தினால் சிறப்படை

வான். ஒழுக்கமே உயர்ந்த குலம்; அஃதின்மையே தாழ்ந்த குலம். பிறப்பினால் யாரும் உயர்வை அடைய முடியாது; ஒழுக்கச் சிறப்பினால் யாவரும் உயர்வைத் திண்ணமாய் அடையலாம்.

கல்வி கற்பதற்குப் பொருள் வேண்டும்; பொருள் இல்லாதவன் கல்வி கற்பது அருமை. தருமம் செய்வதற்கும் பொருள் வேண்டும். ஆனால் ஒழுக்கத்துக்கு அப்படிப்பட்ட தடைகள் யாதொன்றும் இல்லை. எழுநிலை மாடத்தில் இருக்கும் அரசன் எவ்வளவு ஒழுக்கம் உடையவனாக இருக்கமுடியுமோ அவ்வளவு ஒழுக்கம் உடையவனாக ஒரு சிறு குடிசையில் இருக்கும் ஏழையும் இருக்க முடியும். ஆகையால் மாணவர்களே, நீங்கள் ஒழுக்கம் இன்னதெனத் தெரிந்து கொண்டு அதை மறவாது கடைப்பிடித்து ஒழுகுவீர்களாக. ஒழுக்கம் என்று பொதுவாகக் கூறினால் நல்லொழுக்கத்தையே அது குறிக்கும். ஆனாலும் நல்லொழுக்கம் என்றும், தீய ஒழுக்கம் என்றும் பிரித்துச் சொல்லலாம். இப்போது உங்களுக்கு நல்லொழுக்கங்கள் சிலவற்றையும், தீயஒழுக்கங்கள் சிலவற்றையும் கூறுகிறேன்; கேளுங்கள்:

## ‘மனந்தடுமாறேல்’

ஒவ்வொருவரும் மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். எல்லா நன்மை

களும் அதனுல் தாமே வரும். எல்லாத் தீமை களும் ஒழியும். உடம்பை நீரினுல் கழுவித் தூய்மை செய்ய வேண்டும்; மனத்தை உண்மை என்னும் நீரினுலே சுத்தம் செய்ய வேண்டும். நம்முடைய நெஞ்சில் ஒரு கெட்ட எண்ணம் தோன்றும் பொழுதே அதை நசுக்க வேண்டும். இல்லாவிட்டால் அஃது உடனே வளர்ந்து, நம்மைத் தனக்கு அடிமை யாக்கிவிடும். நாம் நமது மனத்தில் எப்பொழுதும் நமக்கும் பிற ருக்கும் நன்மை விளையத்தக்க காரியங்களையே நினைக்க வேண்டும்.

‘நன்றி மறவேல்’

ஒருவர் உனக்குச் செய்த நன்றியை எப்பொ ழுதும் மறவாதே. அவர்களே பிறகு உனக்குத் தீமை செய்தாலும் நன்றியை மறக்கலாகாது. கொலைப் பாவத்துக்கும் கழுவாய் உண்டு; ஆனுல் நன்றி மறந்தவர்களுக்கு ஒன்றும் இல்லை. ஒரு வர் செய்த நன்றியை மறவா திருப்பாயானுல் அவர் உனக்குமேன்மேலும் நன்மை செய்வதற்கு ஏதுவாகும். அதனுல் நன்றி மறவா திருத்தலால் நன்மையும் உண்டாவதை நேரிலே காணலாம்.

‘ஔவியம் பேசேல்’

ஒருவருடைய செல்வத்தையோ மேன்மை யையோ பார்த்துப் பொருமைகொண்டு தீய சொற்களைப் பேசலாகாது. பொருமையால் உன்

னுடைய மேன்மை அழியும் ; மூதேவி உன்னிடம் குடிபுகுவாள் ; சீதேவி உன்னைவிட்டு விலகுவாள். நாம் ஒருவர்மேல் பொறாமை கொண்டதனால் அவருடைய செல்வம் குறைந்துவிடுமா? இல்லை. அவை நமக்கு வந்து விடுமா ? அதுவும் இல்லை. இதை எண்ணிப்பார்த்தால் ஒருவரும் பொறாமை கொள்ள மாட்டார்கள்.

‘ சித்திரம் பேசேல் ’

பயனில்லாத வேடிக்கை வார்த்தைகளைப் பேசாதே. பொய்யை மெய்யாகக் காட்டிப் பேசாதே. அப்படிப் பேசுவது முதலிலே மகிழ்ச்சியைத் தந்தாலும், பிறகு உனக்குள்ள பெருமையை அழித்து விடும். பள்ளிக்கூடத்தில் எப்பொழுதும் வேடிக்கை வார்த்தைகளையே பேசிக்கொண்டு காலங் கழிக்கும் பிள்ளைகள் ப்ரீக்ஷை தவறுவது உண்மை. அவர்கள் உபாத்தியாயர் சொல்லுவதிலே கருத்தைச் செலுத்துவதில்லை.

‘ ஞயம்பட உரை ’

நீபேசும்போதெல்லாம் நயமாகப் பிறருக்கு இன்பம் விளையும்படி பேசு. ஒருவர் முகம் சுளிக்கும்படி ஒன்றையும் கூறாதே. இனிமையான சொற்களால் உலகத்தார் மகிழ்ச்சி அடைவார்கள்.குயில் கூவும்போது அதனால்எவ்வளவு இன்பத்தை அடைகின்றோம் ! அந்தக் களிப்பினால் நீங்களும் அதைப் போலவே கூவவும் செய்கிறீர்

கள். ஆனால் கழுதை கத்தினால் என்ன செய்கிறீர்கள்? உடனே ஓடி அதை அடித்துத் துரத்துகிறீர்கள்! ஏன்? கழுதையின் ஓசை உங்கள் செவிக்குத் துன்பமாய் இருக்கிறது. அதுபோலவே நம்முடைய கடுஞ்சொற்கள் பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கும். அதனால் அவர்கள் நம்மை வெறுப்பார்கள்.

'பொல்லாங் கென்பவை எல்லாந் தவிர்'

தீமை என்று சொல்லப்படும் செய்கைகளை எல்லாம் ஒருபொழுதும் செய்யாதே. சிறு பிள்ளைகள் தாம்பூலம் போடக்கூடாது; போட்டால் பல்லில் அழுக்கேறிப் பலவகைப்பட்ட நோய்கள் உண்டாகும்; நாக்குத் தடித்துப் போய்விடும்; அதனால் வாய் குழறும். புகையிலையை வாயில் போட்டுக் கொண்டாலும், அதைச் சுருட்டாக்கிப் பிடித்தாலும் பலவகைக் கெடுதிகள் உண்டாகும். புகையிலையால் பித்தம், மயக்கம் முதலிய நோய்கள் உண்டாகும்; இருதயம் மெலிவடையும்; தொண்டை காந்தும். சில பிள்ளைகள் வாயிலே எப்பொழுதும் பாக்கு, இலவங்கம், கற்கண்டு முதலிய பொருள்களை அடக்கிக்கொண் டிருப்பார்கள். இப்பழக்கம் மிகவும் பொல்லாதது. இதை உடனே ஒழிக்க வேண்டும். காபி, தேத்தண்ணீர் முதலியவற்றையும் நீக்கிவிடுதல் நன்மை என்று மருத்துவட்

புலவர் கூறுகின்றனர். முதலிலேயே இப்பழக்கத்தைக் கொள்ளா திருத்தல் எல்லா வகையாலும் நன்மையைத் தரும்.

‘ நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு ’

பெரியோர்கள் செய்திருக்கும் சிறந்த நூல்களின் முறையைத் தெரிந்துகொண்டு, உனக்குத் தகுந்த நல்லொழுக்க வழியிலே நடப்பாயாக. நீ ஒவ்வொருநாளும் உன் பாடங்களை ஒழுங்காகப் படித்தல் வேண்டும். படித்த பாடங்களை நெஞ்சில் நினைத்தல் வேண்டும். உபாத்தியாயர் பாடத்தைப் போதிக்கும் பொழுது பசித்தவன் உணவை எவ்வளவு ஆவலுடன் உண்பானோ, அவ்வளவு ஆவலுடன் கேட்டு, மனத்திலே அவைகளை வைத்துக்கொள்ளவேண்டும். உன்னைப் போன்ற மாணுக்கர்களுடன் உன் பாடங்களைப் பற்றிப்பேசுதல் வேண்டும். அவர்களைக் கேள்வி கேட்கவேண்டும்; அவர்களைக் கேட்கச் சொல்லி நீ விடை தரல் வேண்டும்.

உடம்பு வன்மையாக இருக்கவேண்டுமானுல் நாடோறும் தவருமல் பயிற்சி செய்தல் வேண்டும். உடம்பைப் பாதுகாத்துக் கொள்ளாவிட்டால் உயிர் நிற்காது. உயிரை இழந்த பிறகு நமக்குக் கல்வியால் என்ன பயன் உண்டாகும் ? இக்காலத்திலே சில பிள்ளைகள் உடற்பயிற்சி செய்யாமல் எப்பொழுதும் கையும் ஏடு

மாக இருக்கின்றனர். அவர்களைப் பார்த்துப் பெற்றோரிற் சிலரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். அது பெரும்பிழை. பிள்ளைகள் உடம்பு உரம் பெற்றிருத்தல் இன்றி யமையாதது. வேர்வை நீர் வெளிப்படும்படி மாணவர்கள் நாடோறும் உடற் பயிற்சி செய்வாராக.

## பாட்டு

### சிவபெருமான்

அன்பும் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே. (க)

—திருமந்திரம், திருமூலர்.

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி. (உ)

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (ங)

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே(ச)

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்

நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (ரு)

—திருவாசகம், மாணிக்கவாசகர்.

---

## 13. நீலகண்டன்

தெய்வ லோகத்திலே சுரர்களும் அசுரர்களும் அடிக்கடி போர் செய்துகொண் டிருப்பர். சுரர் என்பவர் தேவர்கள். அவர்கள் சுராபானம் செய்தமையால் அப்பெயர் பெற்றனர். அசுரர் சுராபானம் செய்யாதவர்கள். சுராபானம் என்பது அமிர்தத்தைக் குடித்தல். இங்ஙனம் இருக்கையில் தேவர்கள் அசுரரைக் காட்டிலும் மிக்க வன்மையைப் பெற விரும்பினர். அதனால் அவர்கள் விஷ்ணு மூர்த்தியை வணங்கி ஒரு வழி சொல்லும்படி கேட்டனர். விஷ்ணு மூர்த்தி உடனே, "தேவர்களே, திருப்பாற் கடலைக் கடைந்தால் அதினின்றும் அமிர்தம் பிறக்கும்; அதை நீங்கள் உண்டால் சாவாமல் இருக்கலாம்," என்றனர். தேவர்கள் விஷ்ணு மூர்த்தியை எப்படியேனும் அமிர்தத்தைக் கடைந்து கொடுக்கும்படி வேண்டினர். அதற்கு அவரும் அருள்கூர்ந்து ஒப்புக்கொண்டனர்.

பின்பு, திருமால் அசுரர்களுடைய உதவியில்லாமல் திருப்பாற்கடலைக் கடைய முடியாதென்று எண்ணி, அவர்களிடம் சென்று அவர்

கட்கும் அமிர்தத்தைப் பற்றிக் கூறினார். அவர் களுக்கும் பங்கு கொடுப்பதாக அவர் சொல்லிய படியால், அசுரர்களும் அமிர்தத்தின் ஆசை யால் திரண்டு வந்தனர். விஷ்ணு மூர்த்தி மந் தரமலையை மத்தாக நாட்டினார்; அதனைச் சுற்றி வாசுகி என்னும் பாம்பைத் தாம்பாகப் பூட்டி னார்; தேவரை ஒரு புறமும், அசுரரை மற்றொரு புறமும் இருந்து இழுத்துக் கடையும்படி பணித்தார். அப்பொழுது மலை நிலைப்பட வில்லை. அதைக் கண்ட விஷ்ணு மூர்த்தி ஆமை உருக்கொண்டு அதை அசையாமல் தாங்கிக் கொண்டனர். இதுதான் திருமா லுடைய கூர்மாவதாரம் ஆகும். கூர்மம் என்றால் ஆமை என்று பொருள்.

பின்பு, தேவர்களும், அசுரர்களும் கை சலித்துச் சோர்ந்து போயினர் அப்பொழுதும் விஷ்ணுமூர்த்தி இழுப்பவர்களுள் தாமும் ஒரு வராக இருந்து திருப்பாற் கடலைக் கடைந்தார். அப்படிக் கடைந்த காலத்தில் திருப்பாற்கட லிலே விஷம் தோன்றிற்று. அஃது அனைவர் மேலும் வீசத் தேவர்களும், அசுரரும் அஞ்சி ஓடினர். இன்னது செய்வதென யாருக்கும் தெரியவில்லை. பின் யாவரும் சிவபெருமா னிடம் சென்று அவரை வணங்கிக் குறையை விண்ணப்பித்துக் கொண்டனர். அவர் உடனே தம்மிடம் இருந்த சுந்தரர் என்பவரை

அழைத்து, அவ்விஷத்தைக் கொண்டுவரும்படி கூறினர். அவ்வாறே சுந்தரர் அக் கடுநஞ்சைக் கொணர்ந்து தர, சிவபெருமான் வாங்கி உட்கொண்டு அதைக் கண்டத்திலே நிறுத்திக் கொண்டார். அவ்விஷத்தின் கடுமையினுல் சிவபெருமான் கண்டம் கறுத்துவிட்டது. அதனுல் அவருக்கு நீலகண்டன் என்ற திருநாமம் உண்டாயிற்று. தேவர்கள் எல்லாரும் அச்சம் ஒழிந்து களிகூர்ந்தார்கள்.

பிறகு திருப்பாற்கடலிலே அமிர்தம் பிறந்தது. அவ்வமிர்தத்தைத் தேவர்கட்கு மட்டும் கொடுக்க விரும்பிய விஷ்ணுமூர்த்தி மோகினி உருவங் கொண்டார். அந்த அழகான மோகினியைப் பார்த்த வண்ணம் அசுரர் இருந்தனர். அதுதான் சமயம் என்று கண்ட விஷ்ணுவானவர் தேவர்கட்கு அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுத்தனர். அமிர்தம் உண்ட காரணத்தால் தேவர்கள் அமரர் ஆயினர். அமரர் என்ருல் அழியாதவர் என்று பொருள்.

அன்றியும் திருப்பாற் கடலிலே திருமகள், இந்திராணி முதலிய மாதர்களும் தோன்றினர். அவர்களுள் திருமகளைத் திருமாலும், இந்திராணியைத் தேவராஜனுகிய இந்திரனும் மணந்து கொண்டனர். அல்லாமலும் காமதேனு என்னும் பசுவும், உச்சைச்சிரவம் என்னும் குதிரையும், ஐராவதம் என்னும் யானையும், அரிசந்

தனம், சந்தானம், கற்பம், மந்தாரம், பாரிசாதம் என்னும் பஞ்சதருக்களும் தோன்றின. அவைகளையும் இந்திரன் அடைந்தான். மேலும் கௌத்துவ மணி என்னும் இரத்தினமும் தோன்ற, அதனைத் திருமால் தமது திருமார்பிலே அணிந்துகொண்டனர்.

## பாட்டு

### கண்ணபிரான்

ஆநிரை மேய்க்கநீ போதி அருமருந் தாவ தறியாய்
கானக மெல்லாம் திரிந்துன் கரிய திருமேனி வாடப்
பானையில் பாலைப் பருகிப் பற்றாதார் எல்லாம் சிரிப்பத்
தேனில் இனிய பிரானே செண்பகப் பூச்சூட்ட வாராய்.(க)

கருவுடை மேகங்கள் கண்டால் உன்னைக்கண் டால்ஒக்கும் கண்கள்
உருவுடை யாய்உல கேழும் உண்டாக வந்து பிறந்தாய்
திருவுடை யாள்மண வாளா திருவரங் கத்தே கிடந்தாய்
மருவி மணம்கமழ் கின்ற மல்லிகைப் பூச்சூட்ட வாராய். (உ)

கன்றுகள் இல்லம் புகுந்து கதறு கின்றபசு எல்லாம்
நின்றொழிந் தேன்உன்னைக் கூவி நேசம்மே லொன்றும் இலதாய்
மன்றில்நில் லேல்அந்திப் போது மதிள்திரு வெள்ளறை நின்றாய்
நன்றுகண் டாய்என்தன் சொல்லு நான்உன்னைக் காப்பிட வாராய்(ங)

கண்ணில் மணற்கொடு தூவிக் காலினால் பாய்ந்தனை என்றென்று
எண்ணரும் பிள்ளைகள் வந்திட் டிவரால் முறைப்படுகின்றார்
கண்ணனே வெள்ளறைநின்றாய், கண்டாரோ டேதீமை செய்வாய்
வண்ணமே வேலைய தொப்பாய் வள்ளலே காப்பிட வாராய். (ச)

பல்லா யிரவர்இவ் வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்
எல்லாம்உன் மேலன் றிப் போகா தெம்பிரான் நீஇங்கே வாராய்
நல்லார்கள் வெள்ளறை நின்றாய் ஞானச் சுடரே உன் மேனி
சொல்லார வாழ்த்திநின் றேத்திச் சொப்படக் காப்பிட வாராய். (ரு)

—நாலாயிரம், பெரியாழ்வார்.

---

## 14. முக்கண்ணன்

சிவபெருமானுக்கு முக்கண்ணன் என்று ஒரு திருநாமம் உண்டு. அவருக்கு மூன்றாவது திருக்கண் தோன்றிய கதையைக் கேட்பீர்களாக: ஒரு காலத்திலே கைலாய மலையிலே சிவ்பெருமான் வீற்றிருந்தனர். அவர் திருவோலக்கத்திலே தேவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராய் வந்து வணங்கி, அவர் அருளைப் பெற்றுச் சென்றனர். சிவபெருமான் சிலருக்கு 'வருக' என்னும் மதுர மொழியை வழங்கினார்; சிலருக்குத் தமது திருமுடியை அசைத்தார்; சிலருக்குப் புன்னகை அரும்பினார்; வேறு பலருக்குத் திருக் கடைக்கண்நோக்கத்தை அருளினார்.

பிறகு, தேவர் அனைவரும் அகன்று போயினர். சிவபெருமான் ஒருவரே தனித்திருந்தார். அப்போது இளவேனிற் காலம்; தென்றற்காற்று மெல்லென வீசிற்று. பூக்கள் மலர்ந்து மணக்கும் மாலைப் பொழுது. நீல வானத்திலே வெள்ளிய சந்திரன் தோன்றும் செவ்வி நேரம். உலகமெல்

லாம் பெற்ற தாயாகிய உமா தேவியார் சிவபெருமானைக் காண மெதுவாக வந்தார். வந்தவர் பெருமானிடம் ஒரு விளையாட்டை விரும்பி, அவருக்குப் பின்னே சென்று, அவருடைய திருக்கண்கள் இரண்டையும் தமது திருக்கைகளால் பொத்தினர். அப்படி அம்மையார் செய்தவுடன் உலகமெல்லாம் இருண்டது; சூரியன் ஒளி இழந்தான்; சந்திரன் ஒளி யின்றி ஒரு மலரைப்போல இருந்தான்; நெருப்பிலேயும் ஒளியில்லை; எல்லா உலகங்களிலும் உள்ள உயிர்கள் இருட்டிலே கிடந்து தவித்தன.

அப்பொழுது சிவபெருமான் உடனே தமது நெற்றியிலே ஒருகண்ணை உண்டாக்கினுர். அக் கண் தோன்றியதும் எங்கும் ஒளி உண்டாயிற்று. எல்லாரும் வியப்புக் கொண்டனர். அது முதல் அவர் மூன்று கண்கள் உடையவரானுர். சிவபெருமான் வலக்கண் சூரியன் என்றும், இடக்கண் சந்திரன் என்றும், நெற்றிக்கண் நெருப்பு என்றும் சொல்லப்படும்.

உமாதேவியார் பின்பு சிவபெருமானை வணங்கித் தாம் செய்த பிழைக்குத் தண்டனை வேண்டும் என்று கேட்டார். பெருமான் அவரை நோக்கி, "பெண்ணே, பல உயிர்கள் துன்பப்படும்படிசெய்தகாரணத்தால் நீபாவம்செய்தவள் ஆவாய். அதை ஒழிக்கத் தவஞ் செய்வாயாக,"

என்றார். அங்ஙனமே உமாதேவியார் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து, தீவினையினின்றும் நீங்கினார். கடவுளே எல்லாவற்றுக்கும் ஒளியாய் இருப்பவர் என்பது இதனால் நமக்கு நன்கு விளங்குகிறது.

'நாயகன் கண்ந யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாய்இரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடர்ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம் சிவன்உருத் தேச தென்றார்.'

—சிவஞானசித்தியார், அருணந்திசிவனார்.

## 15. எல்லாம் இறைவன் செயல்

கோதாவரி ஓர் அழகிய ஆறு. அவ்வாற்றின் பக்கத்தே ஒரு வனம் உண்டு. அங்கே நெடுங்காலத்துக்கு முன் ஓர் ஆலமரத்தின் தழைத்த கிளைகளில் கூடுகட்டிக் கொண்டு ஆணும், பெண்ணுமாக இரண்டு புறாக்கள் வாழ்ந்து வந்தன. அவை ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் மிகவும் அன்பாக இருந்தன.

இப்படி இருக்கையில் ஒருநாள் வேடன் ஒருவன் அந்த வனத்திற்கு வேட்டையாட வந்தான். அவன் வில்லும், அம்பும் ஏந்திக் கொண்டு காடு முழுதும் திரிந்தான். அவனுக்குக் காடை, கவுதாரி, முயல் முதலிய பிராணிகள் ஒன்றும் அன்று காணப்படவில்லை. அதனால் அவன், அலைந்து

திரிந்து ஓய்ந்து அந்த ஆலமரத்தின் அருகே வந்தான். அங்கே இந்தப் புறாக்கள் இரண்டும் இன்பமாகக் குலாவிக்கொண் டிருந்தன; இவை களைக் கண்டான் வேடன்; "நல்லது, நமக்கு இன்று உணவில்லை என்றிருந்தோம். அம்மட் டில் சோடாய்ப் புறாக்கள் இருக்கின்றன. இவை நம்மை விட்டுத் தப்பமுடியாது," என்று எண் ணிக்கொண்டு, வில்லை வளைத்து, அதில் அம் பைப் பூட்டிக் குறி நேரே பார்த்துக்கொண் டிருந்தான்.

அச்சமயத்தில் ஆகாயத்திலே பறந்திருந்த ஓர் இராஜாளி இந்தப் புறாக்களைப் பார்த்துவிட் டது. அஃது இவைகளை அடித்துண்ணக் கருதி, அவைகளுக்கு நேரே வட்டமிட்டுக் கொண்டு சமயத்தை எதிர்பார்த் திருந்தது.

இந்த ஆபத்தான வேளையிலே புறாக்கள் கொலையாளியாகிய வேடனைப் பார்த்துவிட்டன. அவை, "ஐயோ! என்ன செய்வோம்?" என்று மேலே பறக்க எண்ணிப் பார்க்கையில் தம் உயி ருக்கு உலைவைத்துக் கொண்டிருக்கும் இராஜாளி யைக் கண்டன; மேலே போகவும் வழியில்லை; கீழே இறங்கவும் வழியில்லை. பாவம்! அவ் வேழைப் புறாக்கள் என்ன செய்யும்? அவை களுக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. அவைகள் வேடனையும், இராஜாளியையும்

பார்ப்பதற்கும் பயந்தன. அப்படிப் பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை. அதன்மேல் அப் புறவுகள் தமது கண்களை மூடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொண்டன.

அப்பொழுது ஏழை பங்காளராகிய கடவுள் அருளால், அவ்வாலமரத்தின் கீழிருந்த புற்றிலே வாழ்ந்திருந்த கரும்பாம்பு புறப்பட்டு வந்தது. அது, புருக்களையே நோக்கிக்கொண்டு அடிமேல் அடிவைத்துச் செல்லும் வேடன் கண்ணுக்கு அகப்படவில்லை. வேடனே அம்பை இழுக்கும் நேரத்திலே பாம்பின் மேலே அடி வைத்து விட்டான். அதனால் பாம்பு சீறி அவனுடைய காலைக் கவ்விற்று. வேடன் உடனே அலறி விழுந்தான்; வேடன் விட்ட அம்போ குறி தப்பி வட்டமிட்டிருந்த இராஜாளியின்மேற் பாய அது கீழே விழுந்தது. புருக்கள் இரண்டும் உயிர் தப்பின.

---

## 16. ஓர் உயிரையும் வருத்தாதே

சிறுவர்களே, நீங்கள் ஓர் உயிரையும் உங்கள் விளையாட்டுக் காகவுந் துன்பப்படுத்தல் ஆகாது. நமக்கு விளையாட்டாக இருப்பது அந்த உயிருக்கு எவ்வளவு துன்பமாக இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் செய்யும் நல்ல காரியத்திற்குப் புண்

ணியம் என்று பெயர்; தீய காரியத்திற்குப் பாவம் என்று பெயர். புண்ணியத்தைச் செய்தால் நன்மைஅடைவோம் ; பாவத்தைச் செய்தால் தீமையைத் திண்ணமாய் அடைவோம். சிலர் பாவத்தைச் செய்துவிட்டுப் பிறகு புண்ணியம் செய்தால் அந்தப் பாவம் தொலைந்துவிடும் என்று எண்ணுகிருர்கள். அது தவறு. அப்படி ஒரு காலும் இல்லை. புண்ணியத்துக்கு நல்ல பயனையும், பாவத்துக்குத் தீய பயனையும் நாம் அநுபவித்தே தீர வேண்டும்.

முன்னொரு காலத்தில் மாண்டவியர் என்னும் பெயருள்ள முனிவர் ஒருவர் இருந்தார். அவர் பல அரிய நூல்களை ஓதிஉணர்ந்தார்; அதனுல் நன்ஞானம் பெற்ருர்; அவர், தவமே எல்லாவற்றினும் சிறந்ததெனத் தெளிந்து ஒரு காட்டிலே பர்ணசாலை ஒன்று அமைத்துத் தவஞ் செய்துகொண் டிருந்தார்.

இங்ஙனம் இருக்கையில், ஒருநாள் அவ்வனத்திற்கு அருகே உள்ள அரசன் மாளிகையில் கள்வர் புகுந்து களவாடினர். அக்கள்வர்கள் வெளியேறுகையில் காவலர் பார்த்து விட்டனர். பார்த்த காவலர் கள்வரைத் துரத்தலாயினர். கள்வரோ ஓடியோடிக் கடைசியில் மாண்டவியர் பர்ணசாலையில் புகுந்து மறைந்தனர். அவரைப் பின்பற்றி வந்த காவலர் பர்ணசாலைக்குள் புகுந்து கள்வரைஎல்லாம் பிடித்துக்கொண்

டனர். அன்றியும், காவலர் அங்கே கண்ணை மூடிக்கொண்டு தவம்செய்யும் முனிவரைக் கள்வர் தலைவரெனக் கொண்டு அவரையும் பிடித்துக் கொண்டனர். காவலர் அரசனிடம் கள்வரோடு முனிவரையும் சேர்ப்பிக்க, அவன் அனைவரையும் கழுவிலேற்றக் கட்டளை இட்டான். அவ்வாறே எல்லாரும் கழுவில் ஏற்றப்பட்டனர். கள்வர் எல்லாரும் இறந்தனர். ஆனால் மாண்டவியர் மட்டும் கடவுளையே நினைத்துக்கொண்டு இருந்தபடியால் தம் உயிரை இழக்கவில்லை. ஆனால் அவர் மிகவும் துன்பப்பட்டார்.

இந்த ஆச்சரியத்தைக் கேள்விப்பட்ட அரசன் அவரிடம் வந்து, அவரைக் கழுமரத்தினின்றும் இறக்கி, வணங்கி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். முனிவரோ, "எல்லாம் திருவருட் செயல்," என்று சொல்லிவிட்டுப்போனார். ஆனால் அவர் எப்பொழுதும், "நான் ஒரு பாவமும் அறிந்து செய்ததில்லையே! எனக்கு ஏன் இப்படிப்பட்ட தீவினை வரவேண்டும்!" என்று மனத்தில் எண்ணி எண்ணி வருந்துவார்.

அப்பால் சிறிது காலஞ் செல்ல, முனிவர் தருமதேவனாகிய யமனைக் கண்டார். அவனைக் கண்டு தமது சந்தேகத்தைக் கேட்டார். அவன் அவரைப் பார்த்து, "அப்பா, குழந்தாய், நீ இப்பொழுது பாவம்செய்யாதது உண்மையே.

ஆனால், உன் இளமைப் பருவத்தில் தும்பிகளைப் பிடித்து அவற்றின் வாலிலே ஈர்க்கைச் செலுத்தி விளையாடினாய். அந்தப் பாவம் வந்து உன்னைப் பற்றியது. தும்பிகள் பட்ட துன்பத்தை நீயும் பட்டாய். ஆனால் தவத்தைச் செய்ததால் உயிர் தப்பினாய்; இல்லாவிட்டால் நீயும் மற்றவர்களைப்போல உயிர் இழந்திருப்பாய்,'' என்று கூறினான். அதனால் மாண்டவியர் தெளிவடைந்தார்.

மாணவர்களே, இளமையிற் செய்த பாவம் எப்படி மூண்டு கொண்டது பாருங்கள்! 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.'

'நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்; இன்னும்
நாளை நாளை என்பீ ராகில்,
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்;
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்.'

—கபிலரகவல்.

என்ற பெரியோர் வாக்கு எவ்வளவு தெளிவாக இருக்கிறது பாருங்கள்!

## 17. விரதம்

மதுரை மாநகரின்கண் நெடுங்காலத்துக்கு முன் சோழாந்தகன் என்னும் பாண்டியன் ஒருவன் அரசு புரிந்து வந்தான். அவன் மிகவும் நல்லவன்; குடிகளுடைய நன்மையையே

எப்பொழுதும் நினைப்பவன் ; சிவபக்தி நிறைந்தவன். அவன் எப்படியாலும் சிவலிங்கத்தைத் தரிசிக்காமல் உணவு கொள்ளமாட்டான். இக் கொள்கையில் அவன் எப்பொழுதும் தவறியதில்லை.

ஒருநாள் மன்னவன் தன்னுடைய பரிவாரங்களோடு வேட்டைக்குச் சென்றான். அவன் காட்டிலே பல விலங்குகளையும் கொன்று நெடுநேரம் வேட்டையாடினான். அப்பொழுது ஒரு மான் வீரருடைய அம்புக்கும் அகப்படாமல், வலையையுந் தாண்டி ஓடிற்று. வேட்டை நாய்களும் அதன்பின் ஓட முடியாமற் போயின. அந்த மான் காற்றைப் போலப் பறந்து போவதைக் கண்ட அரசன் அதைப் பின் தொடர்ந்தான். அது அரசனுக்கு அகப்படாமல் தாவி ஓடிற்று. அரசனும் அதனை விடாது தொடர்ந்து சென்று கடைசியில் ஓர் அம்பை எய்து அதைக் கொன்றுவிட்டான்.

அப்பொழுது சூரியன் மறையும் நேரம் ஆய்விட்டது. மன்னவனோ பசியும் களைப்பும் மேலிட ஒருமரத்தின் நிழலிற் போய்த் தங்கினான். அவனால் இருக்கவும் முடியவில்லை. அதனால், அரசன் நிலத்தின்மேற் சாய்ந்தான். அரசன் பரிவாரத்தார், அவனை எங்கும் தேடிக் காணமல் வருந்தினர். பின்னர், அவர்கள் மர நிழலில் அழகான்

மலைபோலச் சாய்ந்து கிடந்த மன்னவனைக் கண்டு திடுக்கிட்டார்கள். உடனே அவர்கள் அரசன் களைப்பை நீக்கத் தண்ணீர்த் துருத்தி யால் அவன் விடாயைத் தணித்தார்கள். அப் பொழுது வேந்தன், "சோம சுந்தரப் பெரு மானே!" என்று சொன்னான்.

அரசனுக்குச் சிறிது தெளிவு வந்ததும், மந்திரிகள் அவனை நோக்கி, "மன்னர் பெரு மானே, சிறிது உணவு கொண்டால் களைப்புத் தீரும்; வேட்டை விளையாட்டால் மிகவும் சோர்ந் திருக்கிறீர்கள்," என்று வேண்டினார்கள். அர சன் அவர்களைப் பார்த்து, "மந்திரிமார்களே, சிவலிங்க தரிசனம் செய்யாமல் நான் சாவா மருந்தானாலும் உண்ண மாட்டேன்," என்றான்.

மந்திரிகள், "அரசே, தேவரீர் திருமேனி க்கு அபாயம் நேரிடுமே," என்று அச்சத்துடன் கூறினார்கள். அரசன், "மந்திரிகளே, நான் சிவலிங்கத்தைத் தரிசியாமல் உண்பதில்லை என் னும் விரதத்தைக் கைக்கொண்டு இதுவரையில் தவறாது காத்து வந்தேன்; இனியும் அதை விடமாட்டேன்; உயிரை விட்டாலும் விடு வேன்," என்று உறுதியாகச் சொன்னான்.

அரசன் மனவுறுதியைப் பார்த்த மந்திரி கள் உடனே அரசனிடம் விடைபெற்றுச் சென் றார்கள். அவர்கள் ஓரிடத்தில் கூடி, "நம் அர

சன் இப்போது சிவலிங்க தரிசனம் செய்வது எப்படிக் கூடும்? மன்னவனோ விரதபங்கம் செய்யான்; என்ன செய்யலாம்? இன்னும் சிறிது நேரத்தில் மன்னவன் உயிர் போனாலும் போகும். மன்னவன் இறந்தால் அவனுக்குப் பின் அரசாள்வதற்கு அவனுக்கு ஒரு புதல்வனும் இல்லை. நாடு அல்லோல கல்லோலமாய் விடும். ஆதலால், நம் உயிர் போனாலும் போகட்டும். நாம் துணிந்து ஓர் உபாயத்தைச் செய்து அரசன் உயிரைக் காப்பாற்ற வேண்டும்,'' என்று பேசி முடிவு செய்துகொண்டனர்.

பின்பு அவர்கள் ஒரு கொன்றை மரத்தின் அடியிலே நல்ல மணலைக் குவித்துத் தண்ணீர் தெளித்து வைத்தனர்; அங்கே ஒரு பெரிய முளையை அடித்தார்கள்; அம் முளைக்குப் பட்டாடை சாத்தினார்கள்; அதற்குப் பூமாலையும் முத்து மாலையும் அணிந்தார்கள். அந்த இடத்திலே அந்த முளை அவர்கள் செய்த வேலைத் திறத்தால் உண்மையான சிவலிங்கப் பெருமானைப் போலவே மிகவும் அழகாக விளங்கிற்று. அதை எல்லோரும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

பின் மந்திரிமார் ஒருவர் பின் ஒருவராக அரசனிடம் போய், ''அரசே, இவ்வனத்திலே கொன்றை மரத்தின் அடியிலே ஒரு சிவலிங்கம் தானே தோன்றியிருக்கிறது. அது கடவுளு

டைய அருளால் எங்கள் கண்களுக்குத் தென் பட்டது,'' என்று சொல்லி ஆரவாரஞ் செய்தார் கள். உடனே அரசன் களிப்புடன் அந்தச் சுயம்பு லிங்கத்தைத் தரிசிக்கும்பொருட்டு எழுந் தான். ஆனால், அவனுடைய நிலைமையைக் கண்ட மந்திரிகள் அவனுக்குக் கைலாகு கொடுத்து மெதுவாக அழைத்துக் கொண்டு போனார்கள்.

அரசன் அங்கே வந்ததும், அமைச்சர்கள் அவனுக்குச் சிவலிங்கத்தைக் காட்டினார்கள். அரசன் மகிழ்ச்சி பொங்கச் சிவலிங்கத்தைத் தரி சித்தான். பிறகு அவனுக்கு மந்திரிகள் உண வைக் கொடுத்தனர். அரசனும் உண்டு பசியும், களையும் நீங்கினான். பின்பு அரசன் மந்திரிமார் களைப் பார்த்து, "அமைச்சர்களே, நமக்கு எளி திலே கிடைத்த இந்தப் பெருமானுக்கு நாம் ஒரு கோயிலைக் கட்டவேண்டும். இங்கே ஓர் ஊரை அமைக்கவேண்டும்,'' என்றான். அதைக் கேட்டவுடன் அமைச்சர்கள் தங்கள் சூழ்ச்சி அரசனுக்குத் தெரிந்துவிடுமே என்று பயந்து ஒவ்வொருவராகக் காட்டிலே பதுங்கினார்கள்.

பிறகு அரசன் மற்றவரோடு சிவலிங்கத்தைப் போய்ப் பார்த்தான். அது ஆப்பாக இருந்தது. அரசன், "ஐயோ! இந்தப்பாவிகள் என் விரதத் தைப் பாழாக்கினார்களே ! இவர்களைப்போல வஞ்சக முடையவரை நான் கதையிலும் கேட்க

வில்லையே! இவர்களை என்ன செய்தாலும் பாவம் இல்லை,'' என்று சொல்லிப் புலியைப் போலச் சீறி வாளை உருவினன்; அவர்களைப் பிடித்து வரும்படி காவலருக்குக் கட்டளை யிட்டான். அவர்களில் ஒருவரும் காணப்படவில்லை. அதன் மேல் அரசன் கவலைக்கடலுள் ஆழ்ந்தான்.

பிறகு அரசன், பலவாறு வருந்திக் கடைசியில் கடவுளை நோக்கி, "அருட்பெருங் கடலே, ஆனந்த வெள்ளமே, இதுகாறும் நான் என் விரதத்தைத் தவருமல் செய்து முடித்திருப்பேனுல், இந்த ஆப்பு உண்மையிலேயே சிவலிங்கப் பெருமானுகத் திகழவேண்டும்; இல்லாவிட்டால் இப்பொழுதே இவ்வாளால் என் கழுத்தை வெட்டிக் கொண்டு மாய்வேன்,'' என்று வஞ்சினம் கூறினன்.

உடனே கடவுள் அருளால் அந்த ஆப்பானது உண்மைச் சிவலிங்கமாக விளங்கியது. அதைக் கண்டதும் அரசன் இன்பத்தால் துள்ளி யாடிக் குதித்தான்; பிறகு, "அமைச்சர்கள் எல்லாரும் அச்சமின்றி வருவார்களாக,'' என்று கூவினன். மந்திரிகளும் நடுக்கத்தோடு ஒருவர் பின் ஒருவராய் வந்து சேர்ந்தார்கள். அரசன் அவர்களை எல்லாம் அன்போடு வரவேற்முன். அனைவரும் மகிழ்ந்தார்கள்.